[illegible]

V1. No.3. 19 Jan 1928.

JL
[illegible]11, N28KN
N28.1.3.
188986.

362

*Reg. No. M. 2324.* தனிப்பிரதி ரூ. 0 2 6

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
உள்நாடு ரூ. 7 8 0
வெளி நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
*No. 11*, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

REGISTRAR OF BOOKS
8 MAY 1928
MADRAS

Vol 1.] 1928ஆ ஜனவரிமீ 19உ [No. 3.

பொருளடக்கம்.

| | | பக்கம். | | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| 1. | செய்யும் கருமமும் செயல்வகையும். | 41 | 5. | தமிழ்ப்பாடம். | 50 |
| 2. | காந்திமதி (Novel) T. N. சேஷாசலம் B. A. B. L. | 43 | 6. | மதிப்புரை. (பருந்தும் நிழலும்). | 53 |
| 3. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L. | 45 | 7. | இராஜ்யதந்திரம் (மொழிபெயர்ப்பு) எமர்ஸன். | 55 |
| 4. | அகப்பொருள் வரலாறு K. இராமரத்நம் ஐயர். B. A. | 48 | 8. | வர்த்தமானம் | 57 |

## கலா நிலயம்.

### செய்யும் கருமமும் செயல் வகையும்.

188986

II

உலகடங்கலும் நாம் காணும் பொருள்களும் சக்திகளும் வெவ்வேருய்த் தோன்றினும் அவைதாம் உண்மையில் ஒன்றே என்று நாம் அறியும்படி செய்கின்ற நூல்களே அறிவு நூல்கள் என்று முன்னுள் கூறினேம். இந்த அறிவு உடைய ஒருவனே மெய் அறிவு உடையவன் ஆகின்றான் பிறவெல்லாம் பழக்கம் வல்லமை பயிற்சி முதலியன ஆகும். இவை அறிவு உறுத்தும் நூல்களாகா. தொழில் பழக்கம், எந்திரவல்லமை, பாஷைப்பயிற்சி, விவசாயம், வர்த்தகம், சட்டம், வயித்தியம், அரசியல் போன்ற இவைகளில் ஒருவன் கைதேர்ந்து இருப்பதினலேயே மாத்திரம் அவனுக்கு அறிவு உண்டு என்று எண்ணுவது பிழை. ஏனெனில் உலகின் ஒற்றுமையை நாம் அறிதற்கு இவை பொதுவாய் ஆதாரமாவதில்லை. அதற்கு மாருக ஒருவேளை, வேற்றுமையை வற்புறுத்தி விவகரிக்கும் வழக்கத்தில் ஆழ்த்தி விடுவதும் அவைகளால் ஆகலாம்.

அறிவு நூல்கள் இருவகை சில ஒற்றுமையே உண்மையென்று தர்க்க நியாயங்களால் சொல்லுவன வேறு சில வஸ்து ஆராய்ச்சியால் அவ்வுண்மையைக் காட்டுவன. வேத சாஸ்திரங்களும் தத்துவ சாஸ்திரங்களும் முன்னதற்குதாரணம். இரசாயனம் சடசாஸ்திரம் உயிர்ச்சாஸ்திரம் போன்றவை மற்ற வகையைச் சேரும். (இவ்விருவகை நூல்களும் கல்வி நூல்கள் அல்லவென்று முன்னரே கூறியுள்ளோம்) இவ்விருதிறத்து நூலாசிரியர்களும் முன்சொன்ன இருவகையால் அணுவிற்கும் அண்டத்திற்கும் பேதமில்லையெனச் சொல்லியும் காட்டியும் நாட்டுவர். ஆஸ்திகரிவர், பிறரெல்லாம் நாஸ்திகர்.

தத்துவக் கொள்கையால் ஒற்றுமைப் பிரமாணங்கள் ஏற்படுகின்றன. பிரமாண பூர்வமாய் அவ்வொற்றுமை எவ்வாறு போதிக்கப் பெறுகின்றன என்பதைப் பகவத்கீதை வேதாந்தநூல்கள் முதலியன பெரியோரிடத்திற் பாடம் கேட்டிருப்பவர் தெரிந்து கொண்டிருப்பார். மற்று, இரசாயனம் போன்ற இரண்டாவது வகையைச் சேர்ந்த சாஸ்திரங்கள் இவ்வொற்றுமையை ஆராய்ச்சியால் எவ்விதம் காட்டுகின்றன வென்பதை விரிக்கிற் பெருகும். அதற்கு இடமும் இதுவல்ல. எனினும், இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும், தோற்றம் குணம் முதலியவற்றாலும் தொழிலாலும், வஸ்து (matter), சக்தி (energy or force) எனும் இருபெரும் பிரிவுகளுள் அடங்கியபோதிலும், வஸ்துக்களெல்லாம் அணுமாத்திரையில் ஓரே தன்மையனவாய் அமைவதையும்; சலனம் (motion), உஷ்ணம் (heat), சப்தம் (sound), வெளிச்சம் (light), மின்சாரம் (electricity). ஸ்காந்தம் (magnetism) ஆகிய சக்திகளெல்லாம் ஓரே சக்தியின் வேறு வேறு தொழில்களாவதையும், அச்சலன சக்தியே (vibration) அணுவிற்குள் அணுவாய் வஸ்துவின் தோற்றத்திற்கு ஆஸ்பதமாய் இருப்பதையும், எளிதில் நாம் மறக்காவகை எடுத்துக்காட்டி இச்சாஸ்திரங்கள் ஒற்றுமையறிவு ஊட்டுகின்ற நன்றியை இந்நாள், சடசாஸ்திர நிபுணர்கள், வஸ்துவின் சக்தியின் தத்துவங்களைப் போக்கிலே போகவிட்டு, அவை

களின் தன்மையையும் குணங்களையும் மாத்திரமே கையாளத் தேர்ச்சியுற்றுப் போர்க்குரிய சாதனங்களும் வெடி மருந்தும் செய்து செய்து கொன்று விடுகின்றனர் என்றால், அறிவுநூல் ஆக்குதல்போக அழித்தற்கு ஆதாரமாய் அமைந்ததென்ன விந்தையோ என்று வருந்துவோர்க்கு ஒன்று கூறுவோம். அவ்விதமே, தத்துவசாஸ்திரப் பிரசங்கிகளும் பலர் ஆன்ம விசாரணையில் ஆழ்ந்தவர்களாகி 'ஸர்வம் பிரம்ம மயம் ஜகத்' என்று மாணவர்களுக்கு வாய் ஓயாது வற்புறுத்தி வருவாரேனும், சுயநயத்திற் சிறிதும் சிந்தைமாறாது ஆசையும் அதனால் வரும் கோபமும் லோபமும் உடையராய்ச் செருக்கும்பொறாமையும் செறிந்த உள்ளத்தோடு கடவுள் என்பது ஒன்று உண்டு என்னும் நினைவேயில்லாமல் தம் வாழ்நாளை நடத்தக் காண்கின்றோம். இவ்விரு திறத்தோர்க்கும் உள்ள ஒற்றுமை அறிவிற்கு மாறாகச் செயல் பிறப்பதன் காரணத்தை நாம் ஆராய்வதனின் முன்னே இன்னுமொன்றும் கூறிவைக்க வேண்டி வருகின்றது.

கடவுளின் கற்பனைகளுக்கு மாறாகச் செய்வது பாவம். அரசனது சட்டங்களுக்கு விரோதமாய் நடப்பது குற்றம். சுகாதார ஆசார விதிகளினின்று பிறழ்வது தீமை. பாபமும் குற்றமும் தீமைகளும் உலகத்திலே பெருகுவதற்குக் காரணம் என்ன? எது பாவம், எது குற்றம், எது தீமை என்று மாந்தர் சரிவர அறியாததாலோ! ஆண்டவன் கற்பனைகளையும், அரசன் சட்டங்களையும், சுகாதார விதிகளையும் அறியாதார் யார். அவைகளுக்கு முரண்பட்டு விவகரித்தால் தண்டனையும் உண்டென்பது எல்லாப் பாபிகளுக்கும் எல்லாக் குற்றவாளிகளுக்கும் எவ்விதத் தீயருக்கும் தெரியும். எனினும் இவ்வறிவு யாரைத்தான் அவர் மனம்போனபடி செய்யாமல் தடுத்தது. விதியாலும் விலக்காலும் ஒருபோதும் வாழ்க்கை செம்மையடையாது. அடையுமாயின், குற்றச் சட்டங்களைக் குடிகளனைவர்க்கும் ஒருவர்விடாமல் வற்புறுத்திப் போதித்துவிட்டால் பிறகு நியாயாதிபதிகளுக்கும் காவற்சேவகர்க்கும் வேலையற்றுப் போய்விடுமல்லவா. குடிப்பதும் குதிரைப் பந்தயமும் தீதென்று அறியாமலா கள்ளுக்கடைக்கும் கிண்டிக்கும் யாத்திரை போகின்றனர். தண்டனை அடைந்தவனே மீண்டும் மீண்டுமக் குற்றம் இழைப்பதற்கு என்ன சொல்லுவீர்! சிறியதோ பெரியதோ செய்யத் தகாதனவற்றைத் தடுத்து நீக்கவும் செய்ய வேண்டியனவற்றைச் செய்து வைக்கவும் விதிகளின் நினைவு ஒன்றுமே எங்ஙனும் போதாது. இந்த இக்கட்டான நிலையினின்றும் நீங்கத்தக்க விடை ஒன்று உளது.

அது யாதெனில், வைத்துக்கட்டிய அறிவு வேறு, உய்த்துணர்ந்த உணர்வு வேறு, என்பதாம். அறிவால் வருவது வாய்ப்பேச்சு: உணர்வால் வருவது ஆத்மானுபவம். அறிவு விளக்கும், உணர்வே தெருட்டும். சாஸ்திர பிரவலித்தனான வேதியனுக்கோ அல்லது உணர்வு முற்றியனுபவித்த நந்தனுக்கோ இறைவன்தாள் எளிதில் எட்டியது? எனவே, அறிவிருந்த மனந்தோறும் உணர்வும் அனுபவமும் கைகூடி விடுமென்று எண்ண இடமில்லை. மாந்தர்களது மனதிற்கு உரிய இயற்கைக் குணத்தைக் கணக்கிற் சேர்க்காமலே அறிவு நூற்களின் பயிற்சியாலேயே உணர்வு வளர்ந்து அனுபவம் வந்துவிடும் என்று நினைப்பதாற்றான் முன் சொன்ன விபரீதங்கள் நேர்கின்றன. மெய்யறிவு வகையில் மாத்திரமல்ல இந்த விபரீதம். மக்கள் அறிந்த மற்றவிஷயங்களுக்கும் அவர் வாழ்க்கைக்கும் வெகு தூரமாயிருப்பதற்குக் காரணமும் மனதின் தன்மைக்கேற்பப் போதனையை நடத்தி வைக்காததேயாகும்.

வாழ்க்கையின் பெருமையும் சிறுமையும் அவரவர் மனத்தின்கண் வளர்வதேயன்றிப் புறத்தே தோற்றும் பொருள்களால் பெறுவனவல்ல. இன்பமும் துன்பமும் அவரவர் கொண்ட வாழ்வின் கொள்கைகளது கூலியேயல்லாது அவை பிறர்தர வாரா. ஆதலால், அறிவு என்று நினைப்பதற்கே இடமில்லாத கைத்தொழில் முதலிய இங்கு நாம் முன் கூறியுள்ள பயிற்சிகளாலும், மெய்யறிவு நூல்களேயாயினும் அவைகளின் தத்துவங்களை ஏற்று உணர்ச்சியோடு அனுபவிக்கும் வண்ணம் நம் மனது முன்னதாகப் பண்பட்டு இருக்காத காலத்திலும், முயற்சிவகை பற்பலவேயாயினும் இவ்வுலகம் எள்ளளவும் இன்பநிலை எய்துவதெங்ஙனம்?

ஏனெனில், அறத்தால் வருவதே இன்பம், அவ்வறமும் ஈதலே. அறம் எனும் பயிர் வளர இன்பக் கதிர் தோன்றிப் பழுக்கும். வாழ்நாள் வேளாண்மை செய்வதெனில் இவ்வறப் பயிரை வளர்ப்பதெனும் வாழ்க்கையே அன்றிப் பிறிதொன்றில்லை. இந்த வேளாண்மையிற்றான் காவியம் போன்ற கல்வி நூல்கள் உழுபடையாய் உதவுகின்றன. வாழ்க்கையின் பயனாய இன்பத்தைக் கதிர் என்றோம். அக்கதிர் விளைய வளர்கின்ற பயிர் அறம், அவ்வறத்திற்கு வித்து அறிவு. அவ்வித்தை விதைக்கும் நிலமும் நம்மனமே விதைக்குமுன் நிலத்தை உழுது பண்படுத்த வேண்டியது இன்றியமையாதது. அந்தக் காரியத்தைத் தான் கலைகள் செய்து வைக்கின்றன. கல்வி என்பது கல் என்னும் பகுதியடியாய்ப் பிறந்த பெயர். 'கல்லு' என்பதற்குத் தோண்டுதல் அதாவது உழுதல் என்னும் பொருள் உண்டு அல்லவா!

இன்பம் விளைவதற்கு இடமாய் இருப்பது மனம் தவிர வேறொன்று இல்லை என்பது யாவரானும் ஏற்றுக்கொள்ளும் பான்மையதாதலால் மனதை வயலாகக் கூறினோம். உழாத வயலில் பயிர் வளராது. எத்தனை வித்து அதனில் இட்டாலும் முளைக்காது. ஆதலால் முதல் முதல் மனதைப் பண்படுத்த வேண்டும். மனதைப் பண்படுத்துவது என்றால் என்ன, அப்பண்படுத்துந் தொழிலைக் கல்வி நூல்கள் எவ்வாறு செய்கின்றன, என்பதை இங்கு நாம் விரித்துரைக்கும் முன்னம், அறிவை வித்து என்றும் அறத்தைப் பயிர் என்றும் அழைத்ததன் கருத்தைச் சிறிது விளக்க வேண்டியவராயிருக்கின்றோம்.

அறம் என்பதும், அதற்கு நேரான வடமொழித் தருமம் என்பதும், ஆங்கிலத்தில் Charity என்பதும் பல பொருள்களில் வழங்குமாயினும் அவை தம்முள் அடங்கிய கருத்து ஈகை ஒன்றே. ஆதலாற்றான் ஔவை பிராட்டியாரும் 'ஈதல் அறம்' என்று கூறினர். தன் நயம் நினைக்காது பிறர் பொருட்டுத் தனதுடைமையாவும் அளிப்பதற்கு முன்வரும் எண்ணந்தான் செயல்வகையில் ஈகையாகக் காண்கின்றது. தனக்கே யொன்று ஆகவேண்டுமென்று சூழ்கின்ற எண்ணமெல்லாம் துன்பம். அவ்வெண்ணம் கைகூடினும் துன்பம், கைகூடாவிடினும் துன்பம். பிறர்க்கு ஒன்று ஆக்கிவைக்க வேண்டும் என்று எண்ணுவது இன்பத்திற்கு ஆதாரம். அது கைகூடின் இன்பம் பெருகுகின்றது. கைகூடாத காலத்திலும் முயற்சிதான் இரட்டுமேயல்லாது உயிரை அரித்தொழிக்குந் துன்பம் தோன்றாது. பிறர் இன்புறக் கண்டுதான் இன்புறப் பழகிய வாழ்க்கையன் மெள்ள மெள்ளத் தான் எனும் நினைவை மறந்து பிறரோடு கலந்து விடுகின்றான். தன்னை மறந்தால் பிறகு துன்பமேது! இதுவே பிரபஞ்சத்தோடு ஐக்கியமாகின்ற பேரின்பம். ஈகை எண்ணமாம் பயிரில் விளைந்த கதிர் இவ்வின்பம். அறஞ்செய விரும்பு



என்று ஔவை கூறியதும், எக்காலத்திலும் பொருள் கொடுக்க இயலாது, ஆனால் கொடுக்க வேண்டும் எனும் விருப்பம் வளர்ந்தாலே இன்பம் பயக்கும் என்பதைக் கருதியேபோலும்.

இந்தப்படி அறம் செய விரும்புதற்கு வித்தாவது அறிவு. நாம் காணும் விஷயங்கள் யாவும் மூலநிலையில் ஒன்றே, அவைதமுள் தோன்றும் பேதமெல்லாம் பொய்த்தோற்றம், என்று விளங்கிய ஒற்றுமையே அறிவென்று கூறினோம். இவ்வறிவு இருந்து பயனும்படுமாயின் அப்புறம் எனது உனது, நான் நீ, எனும் பேதத்திற்குச் சிறிதேனும் இடம் இல்லையே. பிறர்க்குக் கொடுப்பதால் நாம் ஒன்றை இழக்கின்றோம் என்னும் எண்ணமே தோன்றாது. வலதுகையில் எடுத்த பொருளை ஒருவன் தனது இடக்கையில் வைத்துக்கொள்வதால் நஷ்டம் வருமே என்று எவனேனும் எண்ணுகின்றானோ. அவ்வளவு எளியதாய் இவ்வறிவினின்று அறமும் வளரும். ஆதலால் அறிவு அறத்திற்கு வித்தாகின்றது.

## காந்திமதி என்னும்

### காந்தாரநாட்டுக் கட்டழகி.

T. N. சேஷாசலம். B. A. B. L.

(29-வது பக்கத் தொடர்ச்சி)

### 2. கண்ணுண்டு பெண்களுக்குக் காதுமுண்டு.

கலாநாதன் மனத்திருந்த சஞ்சலத்திற்கோ ரளவில்லை. இளமைமுதல் பழகிவந்த காந்திமதியே தனதெண்ணத்திற்கியைந்த மனைவியாவாள் எனக்கருதிவந்த கம்மியச் செல்வனுக்கு இன்று எடுத்து அவள் கூறிய ஒவ்வொரு சொல்லும், தனது மனமாம் பையை ஊசிபோல் தைக்க, உள்ளிருந்த ஆசையெனுங் காற்று வெளிப்படுவதுபோல் விட்டுவிட்டு அவன் பெருமூச் செறியலாயினான். காந்திமதியை உட்புறம் போக்கித் திரும்பிவந்த கருணாகரர் தனது மனநிலையைக் காணுவண்ணந் தரைநோக்கியே நின்றவனாகிக் கலாநாதன், போய்வர விடை வேண்டினான். உள்ளதுணர்ந்த கருணாகரர் கலாநாதனது கையை அன்புடன்பற்றி, "இதற்குள் விடைதரேன். அச்சிறுபூனை கீறிய இருதுளி இரத்தத்திற்கும் பேதைப் பெண்ணொருத்தி வளர்த்த சில வார்த்தைக்கும் நொந்து நீ நைகின்றனையே. ஆவது உரைக்கின்றேன் கேள்," எனக்கூறி அவனைத் தன்னுடன் ஓராசனத் திருத்தித் தனபாக்கியத்தைக் கூவி வெற்றிலை பாக்குக் கொணர்தர விதித்தார். எடுத்துவந்து அதை இட்டபின்னும் அவ்விடம் விட்டகலாது நின்ற வேலைக்காரியைப் பார்த்துக் கருணாகரர், "ஏனம்மே, என்னவேலை இன்னுமுனக் கிங்கு. நாங்கள் பேசிக்கொள்வதைக் கேட்க உன் காது குறுகுறுக்கின்றதோ! வம்பிற்கு வாய்பார்க்காதே, போ," என்று சிரிக்க அவளும் போய்விட்டாள்.

பிறகு, கருணாகரர் பாக்கைச் சீவிக் கலாநாதனுக்குத் தந்து தானும் அருந்தியவராய், "நாதா, காந்திமதி இத்துணை அறிவிலியானதை நினைக்க என்மனஞ் சலிக்கின்றது. எனினும் அவளுடைய இளமையும் என்றன் பொருளின் அளவையும் கருதிக் காந்தியைக் கொள்வாய் என விழைகின்றேன். நீயுந்தான் ஏனவள் கண்ணைக் கறிக்கும் இப்போருடைகளைக் களைந்தபின் என் வீட்டிற்கு வந்திருக்கலாகாது!" எனக்கேட்டனர்.

"இல்லையப்பா, அப்பிழை எனதன்று. நான் இந்நகர் வந்து இறங்கியதும் நாளை இரதிபௌர்ணிமி யென்பது நினைத்தேன். நினைத்தவளவில் காலையில் காந்தியைக் கையுறையுடன் நான் காணலாவதற்கான அனுமதியை உமதிடம் பெறுவதற் கிங்கு ஓடிவந்தேன். கோவிலிற்கு நீவிர் போயிருந்ததைத் தனபாக்கியம் தெரிவித்தாள். அவ்விடம் விரைந்தேன். கோயிலின் வாயிலில் அந்நற்குடி கெடுப்போன் நரபாலன் ஒளிந்தொளிந்து வட்டமிட்டிருந்தான். அதுகண்டு சங்கை கொண்டேன். நீரோ வயதானவர். அப்பெருங்குன்றத்துக் குட்டிநாய் வேட்டைக்குதவாது. ஆகையால் இடையூறொன்றும் நேரா வண்ணம் நானுமுங்களைப் பின்தொடர்ந்தேன். கந்தனதுபயம் என்னை உமக்குக் காட்டிக்கொடுத்துவிட்டது. பின் உள்வர இழுத்தீர். வந்தேன். வாளுடன் உடையை நான் அகற்றாதிருந்ததற் கிதுதான் காரணம்," என ஒரே மூச்சில் கலாநாதன் சொல்லி முடித்தான்.

"உன் காரணம் கிடக்கட்டும் கலாநாதா. நினைத்தவாறு பிதற்ற நீயேன் காந்திக்கு இடம் கொடுக்கின்றாய் சொல்லிற்குச்சொல் எதிர்உரைக்காது விட்டால் பெண்கள்வாய் எளிதில் அடங்காது. அவளைக் கண்டவளவில் உன் உதட்டிற்குப் பூட்டுப் போட்டுவிடுவதேனோ!"

"ஏனெனில் ....... ஏனெனில் .......என்ன சொல்வது! எல்லா வகையிலும் சிறந்த இக் காந்திமதிக்குக் கணவனாதற்கொத்த தகுதி எனக்கில்லை யென்பதை நன்கு உணர்ந்துளேனாதலால். அவளேயோ பெண்ணென்பது! பெரும் தெய்வமன்றோ! அன்னவள் கண் தீண்டவும் நான் பாத்திரனாகாதபோது அவளது மொழியை எப்படித் தடுத்துப் பேசுவேன்!"

"என்ன நாதா, உனக்குத் தெரிந்த வியாபார விவகாரம் இவ்வளவுதானா! கொள்ளப்புகும் பொருளை நீ யெப்பொழுதும் சற்றுக் குறைத்தே மதித்தலல்லவோ வர்த்தக முறை. காந்தி நல்ல பெண், என் மகளுந்தான். ஆனால் உன்னை நீயே தாழ்த்திக்கொண்டு அவளையும் மிகைபடத் துதித்தால் செருக்கொன்று அவள் மனதில் விளைவதாகுமே. ஆயின் உனதெண்ணம் என்னெண்ண மிரண்டும் வீணாய்விடும்."

"பிழைத்தீர், ஐய, செருக்கென்ப தென்றும் காந்தியைச் சேருமோ! ஊழியனாதற்கு மருகனல்லாத நான் அவட்கு நாயகனாகும் பான்மை பெற்றிலன். என் செய்வது!"

"நீ செய்வ தொன்றுண்டு. இந்நகர்க் காளையர் அனைவரும் என் மகளைச் சுற்றி யெம்மருங்கும் மொய்க்கின்றனர். இம்மாலைப் பொழுதுகூட ஒரு இளவல் வீதியில் வழிமறித்து அவளுக்குக் காதல்காட்ட நேர்ந்தனன். அவன்தன் பிறப்பையும் பெற்ற பதவியையும் கருதுங்கால் அச்சமே அதிகமாகின்றது. அவன் பேர்தானும் சொல்ல நாமருகரல்லோம். கோயிலின் வாயிலிலேயே என் மகளுடனவன் மையல்மொழி விளம்ப நான் இடந்தாராததற்குப் பெரிதுஞ் சினந்தகன்றுளான். இத்தகையரெண்ணிறந்தோர். இதையெல்லாம் கருது மளவில் காந்திமதி பெற்றுள பேரழகையுங்கூட நான் சிலபோது

ரோவவேண்டி வருகின்றது. மற்றுக் கணவனும் நின்று அவளைக் காத்தற் கொத்தவன் நீயல்லாது யாருளன்?

"எனின், என்னைப் புதையல் காக்கும் பூதமே யாக்குகின்றீர். இது மிகை அழகிற்கு அரசியாய அவள் பெண்மையைக் காப்பதற்குத் தெய்வமே துணை நிற்கும். பேயும் அவளை எதிர்ப்பட்டால் பணியாது அகலாது!"

"ஆம், ஒருவழி நீயுரைப்ப துண்மையே. காந்தியின் அருகு வருபவர்களெல்லாம் அவள் வயப்பட்டு விடுகின்றனர். இப்பெருங் குன்றச் சிறுன் கந்தனைத்தான் பார். சாதிக்குரிய மூர்க்கம் அவனைவிட்டு இன்னும் அகலவில்லையெனினும் காந்தியின் விரலசைந்தால் கந்தன் உயிரொசிந்து பேழையுள் பாம்பென அடங்கி விடுகின்றான். அவனது குணத்தை மாற்றித் திருத்தக் காந்தி சோர்விலாது முயல்கின்றாள்."

இச்செய்தி கலாநாதனது மனவமைதிக் கேற்றதாயில்லை. அவனறியாமலே கையும் வாயும் பதறின. "அக்காட்டுப்பேய் நாசமாய்ப் போகட்டும். அவனைப்பற்றிக் காந்திமதிக் காகவேண்டிய தென்னவோ! இந்த நாயைப் பிடித்துவைத்து மஞ்சள் பூசி அவள் மிரு மணம் செய்வானேன்! அவனோ அழகுமிகுந்த வடிவத்தன். புத்தியிற் சிறந்த நீர் காந்தியுடன் அடர்ந்துவாழ அவனுக்கு வசதி தரலாகுமோ! கந்தனுக்கு நற்போதனை செய்யக் காந்தியேயோ கடன் பட்டுள்ளாள்", என வெகுண்டுரைத்தனன்.

இதுகாறும் கவற்சியுடன்கேட்டுவந்த கருணாகரர்க்குக் கலாநாதன் காட்டிய இக்கோபம் சிரிப்பைத் தந்தது. "என்ன, நாதா, என் புத்தி ஒருபுறமிருக்க, அச்சிறுவனின் பொருட்டா நீ பொறாமை கொள்கின்றாய்...... அடா பித்தா!" என்றார்.

"கொல்லுலை யனலால் வாடாத முகம் கந்தனது. புகையாற் கலங்காக் கண்கள், சம்மட்டி சுமக்கா அவன் கைகள் செம்பஞ்சிட்டனபோல் மாதர்க்குரியன. அவன் குஞ்சியோ கறுத்துச் சுருண்டு வண்டெனப் பறக்கின்றது. நும்மகள்தான் பேதை மடமாதா யிருந்தாலும் ஆண்மகற் காண்மகன் தரம் பார்த்துத் தேர்ந்தெடுக்கத் தெரியாமற்போகுமோ! ஆயின் அவன் அருகிருக்கக் கம்மியன் கதி என்னவாகும்."

"அடே பைத்தியமே! எஃகைத்தான் விளக்கக் கற்றாயேயன்றிக் கன்னியர் தரத்தை நீ எங்ஙனம் மதித்தல் கூடும். பெண்ணொருத்தியை நாடி வருவதென்றால் சுயமதிப்புடன் தைரியமாய் வருவதா, அல்லது காவற்கூடம் புகும் குற்றவாளிபோல் கையற்றுப் புகுவதா! நீயே யுன்னை மதிக்க மறுத்தால் பிறர்க்கு நீ ஆளாவதெவ்விதம்! இப்படிப் பேசிவிட்டால் பிறகு குருட்டுப் பெண்கூட உன் காதலுக்குக் காது கொடாளே. பெண்களெல்லாந் தம் கண்ணையே நம்பிக் காதலரைத் தேடிக்கொள்வர் என்று எண்ணாதே."

"மற்று, எத்தைக்கண்டு அவள் என்னிடத்தில் இச்சை கொள்வது!"

"கீர்த்தி! கீர்த்தி! உனது கீர்த்தி! நானோ வயதுடன் அனுபவமும் முதிர்ந்தவன். இதை மாத்திரம் மறவாதே, காந்தியும் அவள் தாயைப்போல் ஒரு பெண்ணல்லவோ! கண்பகட்டே அடியுடன் மாதரைக் கவர்ந்து விடாது. அவர் செவியும் சிறிது நிறையவேண்டும். ஊரார் ஒருவனைப் பெரிதாய் மதித்தால் தாமே யவனை வதிக்க விரும்புவர். இந்த இரத்தினபுரியில் புறங்கொடுத்தறியாப் போர்வீரன் யாரென்று கேட்டால், கலாநாதன் என்னும் மறுமொழியே கிடைக்கும். கத்திகவசகேடகம் அவ்வச்சிராயுதத்தோனும் விழையும் வண்ணம் செய்பவன் யார்? காற்றைக் கொளுத்தியாம் கலாநாதனே! குத்துச் சண்டை மல்யுத்தம் வல்லவன் யாரோ? —கலாநாதன். சல்லியனுக்கு நிகராகத் தேர்நனி கடாவுவன் யாவன்? - கலாநாதன். பரிமாச் சாத்திரம்? - கலாநாதன். இன்னும், வெண்பாப்புலி யார்? - அதுவும் கலாநாதனே!

"வஞ்சப் புகழ்ச்சிக்குமோர் வரம்புண்டு."

"பொய்யறியா உத்தமன்தான் யாரோ? - கலாநாதன்! நின் புயவலியும் புலமையும் இவ்வாறாகக் காந்தி அந்தச் சித்திரத்திற்கியைந்த யந்திரப் பதுமைக்கா தன் வாழ்க்கையை விற்பாள். நல்லவழிப் பட்டா லாகாதாவென்று பார்க்கின்றனளே யன்றி மற்றெவ்வகையிலுங் கந்தனை என் பெண் கனவிலும் நினையாள்."

"கந்தனாவது நல்வழியாவது படுவதாவது! உமது மகள் வீண்பாடு படுகின்றாள்."

"ஆனால், இந்தக் காரியத்தில் காந்திமதிக்கு உதவியாக இன்னுமொருவர் தலைப்பட்டிருக்கின்றார். நமது மடத்தைச் சார்ந்த பெரியவர் தயானந்தரும் அவனுக்கு உபதேசம் செய்கின்றனர்."

"சுக்கிராசாரியின் சந்ததியில் வந்தவரல்லாவிடின் உமது தயானந்தர் இந்த அசுரப் பையனைச் சீடனாய்க் கொள்ள ஒருபோதுஞ் சம்மதித்திரார்."

"அவரது குலமுறை யானறியேன் - நமது மடத்துக் குருக்களைப் போலல்லாமல் அவர் பற்பல நூதன போதனைகள் செய்து வருகின்றார். மடத்திலும் மதாசாரியர்களிடத்திலும் அவருக்கு நல்லபேர் இல்லை. காந்திமதியோ அவரது மொழிகளை அல்லும் பகலும் மனனம் செய்கின்றனள். என்மட்டில் கோவிலிற்கும் மடத்திற்கும் செலுத்தவேண்டிய பிரார்த்தனைகளைச் சரிவரச் செலுத்திவிட்டுச் சும்மா இருந்து விடுகின்றேன்."

"நல்லது, கருணாகரரே, நடுநிசி மணியும் அடிக்கின்றது. நான் போய் வருகின்றேன்."

"மகனே, போனவுடன் வா. காந்தி வழக்கமாய்ப் படுக்கும் மேற்கட்டு அறையின் கீழண்டைச் சாளரத்திற்கடியில் வந்து உன் இசையை எடுத்துப் பாடு. மேல் உறுவதற்கான சாதனங்களை யான் வகுத்து வைக்கின்றேன். உன் பண்ணும் பார்வையும் நாளைக் காலையில் காந்தியின் கண்ணையுங் கருத்தையு வேரொடு கவரத் தவறுமாயின், சிங்கத்தின் தோலைப் போர்த்திருந்தாலும் உனக்குச் சுயமாயமைந்த நீளக்காதும் வெள்ளி மூக்கும் மறையவில்லையென்றே நான் நினைக்கவேண்டி நேரிடும்."

"ஆவது உரைத்தீர். அவ்வண்ணமே செய்கின்றேன். கோழியார் கண்விழிப்பதன்முன்னே நான் வந்து குயில்போற் கூவி விடுகின்றேன் பாருங்கள்" என்று கூறிக் கலாநாதன் புறப்பட்டுத் தன்னகம் நோக்கிப் போயினான்.



# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L. (முன் தொடர்ச்சி—பக்கம் 7)

### முதற்சுவைகள்.

சுவையின் வகை எட்டெனத் தொல்காப்பியர் கூறியுள்ளதை முன்னரே குறித்து வைத்தோம். அவற்றிலே உவகை வெகுளி பெருமிதம் இளிவரல் என்ற சுவை நான்கினையும் முதற்சுவைகள் என விதந்து கூறித் தமது சுவையாராய்ச்சியினைத் தொடங்குகின்றார் பாதர்.

### 1. உவகை.

உவகையாவது மகிழ்ச்சி. பலர் பலவகையால் மகிழ்ந்து வாழ்கின்றார்கள். புலவர்கள் உவகையின் பிறப்பிடம் நான்கென்பர். ஒன்று செல்வம். பெருஞ் செல்வர்கள் பொருளால் வரும் பயனைத் துய்த்து உற்றாரோடும் உறவினரோடும் உவகைக் கடலில் ஒருங்கே மூழ்கி மகிழ்கின்றனர்.

உனதுதாய் உலகசராசர மெவையு
மொருங்குடன் பூத்தவள் உந்தை
கனபரிபூரண சுகத்தன் நின்தமையன்
காரியமுதல்வன் நின்மாமன்
வனசனுதியர் பணிபதன் இவர்கள்
வளமெலா முனக் குரித்ததனால்
வினவு செல்வத்துட் செல்வன்நீ
போரூர் வீறிவாழ் ஆறுமா முகனே.

என்று சிதம்பர சுவாமிகள் உற்றார் உறவினர் செல்வத்தில் திளைத்து வாழ்தலால் அவர்களைச் சேர்ந்தோர் செல்வத்துட் செல்வராய்ச் சிறந்து வாழ்வதைத் தெளிவுறுத்துகின்றார். மகிழ்ச்சியின் இரண்டாவது பிறப்பிடம் கல்வி. கல்வியும் ஒரு செல்வமே யன்றோ? புலவர் பெருமக்கள் கம்பரையும் வள்ளுவரையும் கற்றறிந்து தம்மறிவின் ஆழத்தால் தாம் கற்ற நூல்களின் நுண் பொருள்களை நுணுகி ஆராய்ந்து புலவர் கூட்டுண்ணத் தந்துதவித் தாமும் சுவையுணர்ந்து துய்த்துப் பேரின்பக் கடலில் பிரியாது மூழ்கி அகமகிழ்கின்றனர்.

உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

என்றார் அன்றோ திருவள்ளுவனார். மூன்றாவது பிறப்பிடம் காதலனும் காதலியும் கலந்திருக்கும் நிலையேயாகும். இதுவே புணர்வு எனப்பெறும். காதலனும் காதலியும் ஒன்றாய்க்கூடி இன்பத்துறையில் புகுந்தாடி உவகை பூத்திருக்கின்றனர்.

தாம்வீழ்வார் மென்றோட் டுயிலினி னிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள.

என்பவை திருக்குறள். புணர்ச்சியின் மகிழ்தல் என்பது ஒரு கோவைத்துறை அல்லவா. இனி நான்காவது பிறப்பிடம் விளையாட்டு. ஆற்றிலே நீந்திச் சென்றாடுவாரும், வருத்தமின்றி மாலைப் போதிலே பயின்றாரோடு பந்தாடிக் கூடிக் குலாவி வருவாரும், மற்றும் பலவகையான விளையாட்டிற் பொழுது கழிப்பாரும் களித்தே மகிழ்கின்றனர். உண்டாட்டுப் படலத்திலும் பூக்கொய் படலத்திலும் இதனையே புலவர்கள் போற்றிப் புகழ்ந்து கற்றோரைக் களிப்படையச் செய்கின்றனர். திருவிளையாட்டெல்லாம், பெருகி வழியும் இன்ப வெள்ளம் பாவி ஓடும் வாய்க்கால்களே யாகும். ஆண்டவனாரின் அருந்தொழிலனைத்தும் அளவிலா இன்பத்தால் எழுந்தவையாதலினாலே "அலகிலா விளையாட்டாயின". அவர் கூத்தும் இன்பக் கூத்தாயிற்று.

"இனிததமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெறில், மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று அந்தத் திருக்கூத்தின் இன்பநிலையை எளிதிலுணர்ந்த திருநாவுக்கரையர் திருவாய் மலர்ந்தருளியதைக் காண்க. இந்த நான்கிடத்திலும் பிறந்த உவகை பிறரும் தன்னோடு மகிழ்வது கண்டே ஓங்கி உயர்ந்து ஒளிர்வது காண்க. பிறரைக் கீழ்ப்படுத்தி இன்புறுவோரது மகிழ்ச்சியை உவகை என்று உயர்த்திப் பேசுவதில்லை. இதுபற்றியே உவகையினை "அல்லல் நீத்த உவகை" என்றார் தொல்காப்பியனார். பின்னும் அப்பெரியார் இந்த நான்கிடமே உவகையின் பிறப்பிடம் என்று வரையறுத்துக் கூறியுள்ளார்.

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே"

என்பதும் தொல்காப்பியமே.

### 2. வெகுளி.

வெகுளி என்பது மற்றோர் சுவை. இவ் வெகுளியும் பலவையாகப் பிறக்கின்றது. எனினும் புலவர்கள் போற்றிப் புகழும் பிறப்பிடம் நான்கேயாகும்.

"உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்பவந்த வெகுளி நான்கே"

என்றார் தொல்காப்பியனார். கையை வெட்டி விட்டாலும், வெட்ட வந்தாலும் ஒருவனுக்கு வெகுளி பிறக்கின்றது. மக்களைப்பற்றிச் சொல்வான் என்? விலங்குகளைப் பார்ப்போமே? ஓர் புலி தன்மேல் பாய்ந்து தனது முறம் போன்ற காதினை ஒரே அறையாக அறைந்து பிய்த்துப் போக அதனால் வெகுண்டெழுந்த யானை அப்புலியினைக் கொன்றதென ஒரு பழந்தமிழ்ப் புலவர் கூறுகின்றார். இவ்வாறு தன் உறுப்பு அற்றுப் போதலினால் அடங்கா தோங்கும் வெகுளியினை எழுப்பி நிற்கும் இடத்தினை உறுப்பறை என்று தமிழர் கூறினர். இரண்டாவதாகத் தான் பிறந்த குடிக்குத் தீங்கு செய்தவன் பேரிலும் வெகுளி பொங்கி வழிகின்றது.

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க்கு உடைந்தன னாயின் உண்டஎன்
முலையறுத் திடுவன் யான்எனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

எனத் தமிழ்த் தாய் ஒருத்தியைக் குறித்துக் காக்கை பாடினியார் நச்சென்னையார் என்ற அம்மையார் பாடி இருக்கின்றனர். மறவர்களது பெருங்குடியிற் பிறந்த தனது இளஞ்சிறுவன், புறங்கொடுத் தோடித்தன் பழங்குடிக்கொரு பழி தேடினான் என்று பலர் புறங்கூற, அதனைக்கேட்ட அவன்தாய் முதியோளாக இருந்தும் அடங்காது எழுந்து முழுதும் முற்றிய சினத்தோடே வெறிக்கொண் டோடினாள். அவர்கள் கூறியதுண்மையானால் அத்தகைய கோழைக்குப் பால்கொடுத்துவளர்த்த தன்

னைச் சிதைத்துக்கொள்வதாக வஞ்சினம் கூறி வாளும் கையுமாகப் புறப்பட்டாள், என அழகுபட அப்பழந்தமிழ் அம்மையார் பாடியுள்ளார்கள். இவ்வாறு வெகுளி பிறக்கும் இடத்தினைத் தமிழர் குடிகோள் என்று கூறி வேறுபடுத்தினர். மூன்றாவதாக, நம்மைக் கோல்கொண்டு அலைத்துக் கொடுமை செய்வார் மேலும், நம்மைப் பிடித்தும் அடித்தும் துரத்தியும் வெருட்டுவார்மேலும் வெகுளிபற்றி எரிகின்றது. கோலால் அடிக்கவும் வேண்டுவதில்லை. எடுத்துக் காட்டினால் போதாதா? கதும் என்று புகைந்து எழுகின்றதே சினம். இதனைத் தமிழ் நூல் வல்லவர்கள் "அலை" என்பார்கள்.

சீதை சிறையிருந்த பொழிலினையும் அரக்கர்களையும் அனுமார் அழித்தபோது இந்திரசித்துச் சினங்கொண்டு வருவதை அழகாகப் புனைந்துரைத்துள்ளார் கம்பர்.

தேரும் யானையும் புரவியும் அரக்கரும் சிந்திப்
பாரின் வீழ்தலும் தானொரு தனிநின்ற பணைத்தோள்
வீர வீரனும் முறுவலும் வெகுளியும் வீங்க
வாரும் வாரும்என் றழைக்கின்ற அநுமன்மேல் வந்தான்

என்ற பாடலைக் காண்க. நான்காவது பிறப்பிடம் கொலை என்பதாகும். நமது அறிவையோ புகழையோ கொன்றுவிட்டாற்போல இகழ்ந்துரைத்தபோது வரும் வெகுளியினை அடக்கவல்லார் யார். "மானம் நீங்கியபின் வாழாமை முன் இனிதே" என்பார் ஆகலின் இகழ்ச்சியைப் பெரியோர் கொலையாகவே எண்ணுவர்.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்."

சேரன் செங்குட்டுவன் வடநாட்டரசர்களை வென்று வந்ததைக்கேட்ட மற்றைய தமிழ் அரசர்கள் அவனை இழித்துரைத்தபோது செங்குட்டுவன் செங்கண் சிவந்து சினம் கொண்ட கதையைச் சிலப்பதிகாரம் சொல்லிப் போகின்றது.

"ஏனை மன்னர் இருவரும் கூறிய
நீண்மொழி எல்லாம் நீலன் கூறத்
தாமரைச் செங்கண் தழல்நிறம் கொள்ளக்
கோமகன் நகுதலும்" என்று தொடங்கிப்

போகின்றது.

கொலை என்பதற்கு இகழப்படல் எனப் பொருள் கொள்ளாது உயிர்க்கொலை என்றே பொருள் கொள்ளின் கொலையுண்டானே சினம்கொண்டு திரிதல் இவ்வுலகில் இல்லை என்க. பேயாய்த்திரிந்து பிறரை வாட்டுவதைப்பற்றி நூல்கள் இங்கே கூறவரவில்லை. அது பற்றித் தான் பேராசிரியர் 'கொலை' என்பதற்கு மேற்சொன்னவாறு உரை கண்டுள்ளார்.

### 3. பெருமிதம்.

பெருமிதம் என்பது மூன்றாவது சுவை. எல்லோருக்கும் மேம்பட்டு நிற்கும் நிலையைக் குறித்தலினாலே இதனைத் தமிழ் அறிஞர்கள் பெருமிதம் என வழங்கியது எல்லாவகையாலும் பொருத்தமுடையதேயாகும். பலர்க்கும் மேம்பட்டு நிற்கும் நிலையைப் புறப்பொருளாராய்ச்சிவாணர்கள் முல்லை என்றும் வாகை என்றும் பலவாறு வேறுபிரித்துப் புகழ்வர். இவ்வாறு ஒப்புயர்வற்றுப் பெரியோனாய் நிற்கின்ற நிலையினைப் பெருங்கல்வி மானிடத்தும், ஒன்றற்கு மஞ்சாத மறவன் கண்ணும், என்ன வந்தாலும் இகழத்தக்கன செய்யாது ஒழுக்கத்தழகால் உயர்ந்தோன்பாலும், உயிரும் உடலும் கேட்டாலும் இல்லை என்னாது கொடுத்தருளும் பெருவள்ளல்கண்மாட்டும், காணகின்றோம். இந்த நான்கிடங்களே பெருமிதத்தின் பிறப்பிடம் எனத் தொல்காப்பியனாரும்,

"கல்வி தறுகண் இசைமை கொடை எனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

என்று அறுதியிட்டுக் கூறினர்.

கீழே நெருப்புக் கொழுந்து விட்டெரிகின்றது. மேலே கொப்பரையில் எண்ணெய் மிகக் காய்ந்து ஆவியாய்ப் பொங்கிக் கொதிக்கின்றது. நடுவே உடலெல்லாம் வாள்களைக் கட்டிக்கொண்டு நிற்கின்றான் காளமேகன். அந்தக் கொட்டகையின் நான்கு மூலையிலும் யானைகள் நிற்கின்றன. தோல்வியுற்றதும் யானைகள் வலித்திழுக்கக் காளமேகன் துண்டுதுண்டாக வெட்டுண்டு எண்ணெயில் பொரித்தெடுக்கப்பட்டு நெருப்பில் விழுந்து சாம்பராக வேண்டுவதுதான். அவனைச் சுற்றிலும், அவனைத் தோற்கடித்து யமனுலகனுப்ப முன்வந்து நிற்கும் திருமலைராயகாது அரண்மனைப் புலவர்களாகிய அதிமதுர கவியே முதலானோர் வஞ்சினம் கூறி மிடுக்குடன் அமர்ந்து எவராலும் பாடமுடியாதபடி எல்லாம் சமிக்கை கொடுக்கின்றனர். யமகண்டத்தினிடையே எதற்கும் அஞ்சாது எவரையும் பொருட்படுத்தாது அவர்கள் கேட்டபடி எல்லாம் பாடியதோடு நில்லாது அந்தப் பாடல்களிலேயே அவர்களை இகழ்ந்தும் பாடி முடித்து வெற்றி பெறுகின்றான் காளமேகன். இவனது பெருமிதத்தை நினைக்க மனங் கலங்குகின்றது. இது கல்வியால் வந்த பெருமிதம்.

வீடுணர்ந் தார்க்கும் வியப்பாமால் இந்நின்ற
வாடல் முதியாள் வயிற்றிடம்—கூடார்
பெரும்படை வெள்ளம் நெரிதரவும் பேரா
இரும்புலி சேர்ந்த இடம்.

என்றதில் கண்ட பெருமிதம் தறுகணண்மையால் வந்த பெருமிதமாகும். இந்தப் பாடலை "தனிநிலை" என்னும் வஞ்சித்துறைக்கு எடுத்துக் காட்டாக ஐயனாரிதனார் கூறியுள்ளார். "போரினைச் செய்யும் சேனையிடத்து வெள்ளம் தள்ளாதபடி கல்லாற் கட்டின கரையே போலப் பெரும்படையை ஒரு வீரன் தடுத்த நிலையைச் சொல்லியது" என்று புறப்பொருள் வெண்பா மாலைக்கு உரைகண்ட சாமுண்டித் தேவநாயனார் தனிநிலைக்குப் பொருள் கூறுவர். சொன்ன சொல் தவறாது தனது நாட்டை விச்வாமித்திரருக்குக் கொடுத்துத் தனது பெண்டுபிள்ளையை விற்றும் தன்னை ஓர்வெட்டியானது அடிமையாக்கிக்கொண்டும் அம்முனிவருக்குப் பட்டகடனைத் தீர்த்துப் பிணஞ் சுடுவதற்குப் பிறர்தரும் வாய்க்கரிசி கொண்டு வயிற்றைக் கழுவிவருகையில், தனது மனையாட்டி தனது அரும்பெறன் மகனைக்கட்டையிலேற்றிக் கண்ணீரும்கம்பலையுமாய்க் கதறி நிற்கையில், அரசனது ஏவலாட்கள் அவ்வாறு நிற்பவள் மேல் கொலைக்குற்றஞ்சாட்ட, அதன்மேல் அரசன் இட்ட கட்டளையின்படி அவளைக் கொல்ல, அரிச்சந்திரன் வாளோச்சி நிற்கும் அந்தத் தறுவாயிலும் தளராத மனமுடையவனாய் நிற்க, விச்வாமித்ரர் "ஒரு பொய் சொன்னால் இடரெலாம் ஒழியும்" என்று எதிர்வந்து கூறிய போதும் நிலைகலங்காத நெறியில் நின்றான்.

பதிஇழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
நிதிஇழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதிஇழக்கினும் கட்டுரை இழக்கிலேம் என்றார்
மதிஇழந்துதன் வாயிழந்து அருந்தவன் மறைந்தான்.

என்றமை காண்க. அரிச்சந்திரனது வாய்மைத் தவத்தினையும் ஒழுக்கச் சிறப்பினையும் யாரே புகழ்வார்? விச்வாமித்திரர் முனிவர்பெருமானாய் இருந்தும், இவன் எதிரில் தலைகுனிந்து செல்லாது வேறு என்ன செய்வார்? அவ்வாறு வெற்றியடைந்தான் அரிச்சந்திரன். இஃது இசைமையால் வந்த பெருமிதம். கன்னன் தனது உயிர்நிலையாக இருந்த கவசகுண்டலங்களை இந்திரன் கேட்டதும் கொடுத்துவிட்டான். அன்னையாவாள்



முன்னமேயே வந்து பாம்பம்பினை ஒருகாலுக்குமேல் இருகால் விடுதலாகாதென ஒரு வரம்கேட்க அவ்வரத்தினையும் இல்லை என்னாது ஈந்து, அதன்படி ஒருமுறை விட்ட அம்பு தப்பிப்போக மறுமுறை விடாது வேறொரு துணையுமின்றி அறமே வலியாகத் தனது தேரிலே இளைத்துக் களைத்து "மெய்த்தல முழுதும் திறந்து குருதி வெயிலவன் கரங்கள்போல் விரிய" உருக்குலைந்து குந்தி இருந்தான். அப்போது அவனது அறத்தையும் கைப்பற்றினால்அன்றி இறவான் என உணர்ந்த கண்ணன் ஓர் ஏழை மறையவனாக வேற்றுருக்கொண்டு கன்னனிடம் வந்து அவன் செய்த அறத்தினைத் தந்தருளவேண்டு மென்று இரந்து நின்றான். உடனே அவன் அகமகிழ்ந்து,

"ஆவியோ நிலையிற் கலங்கியது யாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம்
நயக்கும் பக்குவந் தன்னில் வந்திலையால்
ஓவிலாது யான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்கநீ உனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரில்லன் என்றான்
புண்ணிய மிதனினும் பெரிதோ"

என்று கூறித் தனது நெஞ்சிற் பதிந்துள்ளதோர் அம்பினைப் பிடுங்கி அதிலிருந்து பொங்கிய குருதி கொண்டு தாரைவார்த்துத் தந்து தன்னுயிர்துறந்தான் கன்னன். அருச்சுனனால் போரில் வெல்லப்பட்டுக் கொலையுண்ட கன்னன் அல்லவா உண்மையில் தனது கொடையால் கண்ணனாகிய கடவுளையும் வென்றான். இதுவே கொடையால் வந்த பெருமிதம்.

### 4. இளிவரல்.

நான்காவதாகக் கூறிய இளிவரலுக்கு இழிவு என்பது பொருள். மூப்பினாலே நரை திரையாகித் தடியூன்றி நடக்கும் கிழவன் தனது உடலம் இளமைப்போதில் இன்பவாயிலாக இருந்தது போக இப்போது பெருஞ் சுமையாகித் தன்னை இறுத்தலும் உடலெல்லாம் கூனிக்குன்றித் தூக்கம்இன்றி ஏக்கங்கொண்டு, இறப்பதே மேலென ஒரு புறம் எண்ணியும் இறப்பதற் கென்கடவேன் என மற்றொருபுறம் அஞ்சியும் தயங்கித் தத்தளித்து, தன்னை ஒன்றும் செய்யவிடாதுகட்டிப்போட்டு சிறையிலிட்டுவருத்தும் முதுமையினை வெறுத்து நிற்கின்றான். இது முதுமையால் வந்த இளிவரல். யயாதி என்பவன் முதலில் வெள்ளியின் மகளாகிய தெய்வயானையை மணந்துகொண்டான். பின்னர் அவளுக்குத் தெரியாமல் சன்மிட்டை என்பவளைக் கூடிப் பிள்ளைகளைப் பெற்றான். இதனை அறிந்த வெள்ளி யயாதியை முதியோனாகுமாறு நிறைமொழியால்கூற அந்த யயாதியும்.

கனலெழுந் துடலை முருக்கிட வெளிறிக்
காத்திரம் பழுத்தற முதிர்ந்து
புனைநரை சரையும் இருமலும் மிகுந்து
புரவலன் துயருழந் தனனே,

என்று வில்லிபுத்தூரார் புனைந்துரைத்தபடி முதுமை வாய்ப்பட்டு இழிந்த நிலையினை அடைந்தானும். எனவே முதுமை என்பது இளிவரல் என்பதன் தாயகம் என்பது பெற்றாம். இனிப் பிணி என்பது இரண்டாவது தாயகமாகும். பிணியால் வருந்துவாரும் ஒருவகையில் இழிநிலை அடைந்து வருந்துகின்றனர்.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு தொடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

என்று கதறியழுது திருநாவுக்கரையர் புலம்புகின்றார். அவர் சூலைநோயால் என்ன பாடுபட்டார்.

"தோற்றாதென் வயிற்றி னகம்படியே குடரோடு
தொடக்கி முடக்கியிட ஆற்றேன்" வயிற்றோடு
தொடக்கி முடக்கியிட நஞ்சாகி வந்தென்னை
நலிவதனை நணுகாமற் றுரந்துமீட் அஞ்சேலு
மென்னீர்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்."
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய் அலந்தேன்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர் பயந்தே
என்வயிற்றி னகம்படியே பறித்துப்
புரட்டி யறுத்தீர்த்திட நானயர்ந்தேன்.
கலித்தே என்வயிற்றின் அகம்படிடே கலக்கி
மலக்கிட்டுக் கவர்ந்து தின்ன அலுத்தேன்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தாலென்
வேதனையான விலக்கி யிடாய்"

என்றெல்லாம் தாம் சூலைநோயால் பட்ட பெருந்துயரை வாய்விட்டுக் கூறிப் புலம்புகின்றார். இங்குப் பிறக்கும் இளிவரற் சுவை பிணியாற் பிறந்தது. இனி வருத்தத்தாலும் இளிவரல் பிறக்கின்றது. நெற்றி வேர்வை நிலத்தில்விழ நாள்தோறும் கையை யுடைத்து அரை வயிறு கஞ்சிக்கும் அல்லல்பட்டும் பெருமுயற்சி செய்து சிறுமைப்படுவாரும் எந்நாளும் எப்போதும் தாம் பாடுபடுவதற்கு மனம் நைந்து "பாழான வேலையைச் செய்து தொலைக்கவேண்டுமே" என முணுமுணுத்துக் கொண்டே போகின்றனர். குங்குலியக் கலைய நாயனார் காலத்து அரசன் ஒருவன் சாய்ந்திருந்த திருப்பனந்தாள் சிவலிங்கத்தினை நிமிர்த்த எத்துணையோ நாள் இரவும் பகலும் பல யானைகளைப் பூட்டிப் பார்த்தும் சிவலிங்கம் அசைந்தபாடில்லை; அதுகொண்டு தனது இழிநிலைக்கு நொந்து நின்றானும் அரசன்.

செங்கண் வெள்ளேற்றின் பாகன் திருப்பனந்தாளில் மே[வும்]
அங்கணன் செம்மை கண்டு கும்பிட அரசனார்வம்
பொங்கித்தன் வேழமெல்லாம் பூட்டவும் நேர் நில்லாமைக்
கங்குலும் பகலும் தீராக் கவலையுந் தழுங்கிச் செல்ல.

என்று இதனைச் சேக்கிழார் இளிவரற் சுவைபடக் கூறுவார். ஆகவே வருத்தம் என்பது இளிவரலுக்கு மூன்றாம் தாயகமாகும்.

அவ்வாறே மென்மை என்பது நான்காவது தாயகமாகும். வலியில்லாதிருக்கும் மெலியாரும் வலியின்மையால் தாம் படும்பாட்டை நினைந்து தமது மென்மையை இகழ்ந்து வெறுக்கின்றனர். இராவணன் இராமரால் முதற்போரில் தோற்கடிக்கப் பட்டபோது வலியற்று நின்ற நிலையை இளிவரற்சுவைபடக் கூறுகின்றார் கம்பர்.

அறங்க டந்தவர் செயலிதென் றுலகெலா மார்ப்ப
நிறங்க ரிந்திட நிலவிரல் கிளைத்திட நின்றான்
இறங்கு கண்ணினன் எல்லழி முகத்தினன் தலையன்
வெறுங்கை நாற்றினன் விழுத்தடை யாலன்ன மெய்[யன்]

இஃது மென்மையால் பிறந்த இளிவரலாகும். இவ்வாறெல்லாம் இளிவரல் பிறப்பதனை அறிந்த தொல்காப்பியனார்,

"மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே"

என்று கூறிப் போயினர். இவ்வாறு முதற்சுவை என்ற நான்கினையும் அறிக. இதனின்றும் மற்றைய நான்கு சுவைகளும் பிறத்தலினாலே இவற்றை முதற்சுவை என்றார் பரதர்.

# அகப்பொருள் வரலாறு.

K. இராமரத்நம் ஐயர் B. A.

[முன் 36-ம் பக்கத் தொடர்ச்சி]

## பாங்கியிற் கூட்டம்

இவ்வாறு நாற்றத்தாலும் தோற்றத்தாலும் தலைவியின் வேறுபாடுணர்ந்து இது தெய்வத்தால் உண்டாயதோ மக்களால் உண்டாயதோ என்று ஐயுற்ற தோழி, பின்னுமிதனை ஆராய்ந்து தேரவேண்டும் என்னுங் கருத்தினளாய்த் தலைவியின் வழக்க ஒழுக்கங்களைக் கவனித்து நோக்கலுற்றாள். நோக்க, அவள் சில நாளாக உணவு அருகினதும், அம்மனை கழங்கு முதலியன முன்போற் பயில விரும்பாமையும், தம்மினீங்கித் தனித்துலாவலும், அடிக்கடி ஓரிடத்தை நோக்கிச் செல்லுதலும் காரணம் பற்றி எழாத செய்கை அன்றென அனுமானித்தாள். அனுமானித்து அதனை அறிய முயல்வாள், மணமாகாக் கன்னியர் தக்க நாயகனைப் பெறுமாறு எருவைத்தூவி இளம்பிறையைத் தொழுதல் மரபாதலின், அப்பொழுது எழுந்த அந்திப் பிறையைத் தலைவிக்குக்காட்டி, "வழக்கம்போல் இதனைத் தொழுவோம், வா" என்றுரைத்துத் தான் தொழுது நின்றாள். தலைவனைப் பெற்று அவனைத் தன் கணவனாக் கொண்ட தலைவி இனி அவ்வாறு தொழுதல் தன் கற்புக்கு இழுக்காகுமென நினைந்து வாளா இருந்தாள்.

இதனாலும் தான் கொண்ட ஐயம் உறுதியுறப்பெற்ற தோழி அவ்வளவோடு நில்லாமல், பின்னும் தலைவியை நோக்கி, "எனது இன்னுயிர் அனையாய்! உனது கண்கள் செவ்வரி பரந்து எப்போதும் தாமரை யிதழ்போலச் சிறிது செம்மை கலந்த வெண்ணிறத்தோடு விளங்குந் தன்மையவே. உனது உதடுகள் என்றும் முருக்கலர்போல மிகச் சிவந்திருக்கும் இயல்பினவே. இன்று இவ்வியற்கை மாறி ஒன்றன் நிறத்தை மற்றொன்று கொண்டு கண்மிகச் செவந்தும் வாய்மிக வெளுத்தும் இருப்பதென்னோ?" எனக் கேட்டாள். அதற்குத் தலைவி "நான் தேமலர் நாடிச்சென்ற வனத்துத் தீஞ்சுனையொன்று கண்டு அதிலாடி வந்தேன். அதனால் இவ்வாறு யிருக்கலாம்" என்றாள். "ஆம், ஆம், அது மெய்யே. ஆயினும் இப்புதிய பூவையும் உன் தலையிற் சூட்டவல்லதோ அது? அவ்வாறாயின் அந்தச் சித்திரச் சுனையைக் கண்டு நானும் அதில் தோய்ந்தாடி வர விரும்புகின்றேன்" என்று நகைசெய்தாள் தோழி. அதற்குமே லொன்றும் சொல்லமாட்டாது தலைவி நாணித் தலைகுனிந்து காற்பெருவிரல் நிலங்கிளைத்திட நின்றாள். இவற்றானெல்லாம் தலைவிக்குப் புதுமகன் எவனோ வொருவனுடைய சினேகம் சமீபத்தில் ஏற்பட்டிருக்கிறதென்றும், களவொழுக்கத்தால் அவனைச் சந்தித்து வருகிறாளென்றும், தன்னிடத்து அதைச்சொல்ல வெட்கி மறைக்கின்றாள் என்றும் ஓர்ந்து, இன்னும் நுணுகி ஆராய்ந்து உண்மையை யறிந்து மேற்செயற்பாலதைச் செய்யவேண்டும் என்று நினைத்து, அம்மட்டோடு அப்பேச்சை நிறுத்திவிட்டாள். பிறகு வழக்கம்போல் அன்றைப் பிற்பகல் தலைவியோடு தாமெல்லோரும் பொழிலகத்துப் புக்கார். புக்கபின் அப்பாங்கி மெல்ல அவர்களை விட்டுப் பிரிந்து முன்னாள் தலைவி தனித்துச் சென்ற வழியே தானுஞ்சென்று தலைமகனும் தலைமகளும் தம்முள் தலைப்பெய்து கூடிய தேமாம்பொழிலை யுற்று, அதன்கண் ஒரு புறத்தே காண்பதற்கினிய கவின்கொண்டு விளங்கிய மாதவிப் பொதும்பரை நோக்கி நின்றாள்.

இவ்விடத்துச் செய்தி இன்னணமாக, தலைவன் நான்காநாட் காலையிலெழுந்து, இடையீடின்றிப் பின்னுஞ் சிலநாள் இவ்வாறே தலைவியின் இன்ப நலத்தை நுகர விரும்பி, அதற்குத் தலைவியின் உயிர்ப் பாங்கியினது உதவி இன்றியமையாதென ஓர்ந்து, அதைப் பெறும்வழி யாதென நாடுவானாயினான். அப்பொழுது அங்கு வந்துற்ற பாங்கனோடுங் கலந்தாலோசித்து, எப்படியாவது அப்பாங்கியைத் தனித்துக் கண்டு அவளுக்கு உண்மையை யுரைத்து அவளைத் தமது செயலுக்கு உடன்படுவித்துக் கொள்ளலே ஒழுங்கெனத் தேர்ந்து, வழக்கம்போல் வரையகத்தே சென்றால் அவளைக் காணப் பெறலாமென்று கருதி அற்றைப் பிற்பகல் அவன் தன் பாங்கனுடன் அங்கே சென்றான். சென்றவன் பாங்கனை ஓரிடத்தே நிறுத்திவிட்டுத் தான் இருபுறமும் பார்த்துக் கொண்டே மெதுவாய்க் குறியிடம் நோக்கிச்சென்றான்.

அங்கே, கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டாற்போலப் பாங்கி நறைக்கொடி தழுவிப் படர்ந்ததோர் நறுங்காழ்ச் சந்தனமரத் தயலே தனித்து நிற்கக் கண்டான். அதுவுந் தெய்வானுகூலமென்று உன்னினவனாய் அவளை முன்னி "மென்மலர் நீத்துக் கன்மலை நின்ற பொன்மகள் அனையீர்: கல்லதர் நடந்து காலோய்ந்து நெறிதப்பி இங்கே வந்துள்ளேன். உமது ஊரின் பேரை யுரைத்து அங்கே போகும் வழியைக் காட்டினால் பெரும் புண்ணியமுண்டு உமக்கு" என்று பணிமொழி பகர்ந்து கேட்டான். அன்னிய னொருவனோடு தனித்து நின்று உரையாடுதல் கன்னியர்க்கு அழகன்றெனக் கொண்டு அவள் அதற்குப் பதிலொன்றும் உரையாதிருக்க, அவன் மீட்டும் "ஊரைச் சொன்னால் உமக்கு வரும் ஏதம் ஏதேனுமுண்டேல், நும் திருப்பேரையாவது சொல்லும்." என்றான். அதைக் கேட்டு அவள் அவன் சிந்தை செம்மைத்தன்று, எனச் சந்தேகித்து முகங்கொடாது நின்றாள். அப்பொழுது அவன் தன் கருத்தைக் குறியால் சற்று அவளுக்கு உணர்த்த விரும்பிப் பின்னும் அவள் முகத்தெதிருற்று "வேடன் கைந்நின்று தப்பிக் கோக்குஞ் சரத்தோடும் கோக் குஞ்சரம் ஒன்று தன் காதற் பிடியைத் தேடி இங்கடையக் கண்டீரோ?" என்றும், "இன்பிணையைப் பிரிந்த இருங்கலை ஒன்று அதை நாடி இவ்வழிப் போந்ததுண்டோ" என்றும் அடுத்தடுத்துக் கேட்ப, அவனது வேட்கைக் குறிப்பை ஒருவாறுணர்ந்து தலைவியைக் கருத்தழியச் செய்த காளை இவன்தானோ என்று ஐயுற்று, இவன் உட்கருத்தை இன்னும் ஆராய்ந்து தேறவேண்டும் என நினைத்து, எதிர்மாற்றம் ஒன்றுங் கொடாது அவன் செயலையுஞ் சொல்லையும் முனிந்தாள் போல அங்கெதிர் நில்லாது அப்பால் அகன்றாள். அகன்று விரைந்து மீண்டு வழியிலே சில பூக்களைக் கொய்துகொண்டு தலைவியோடு கூடினாள்.

அவளைக்கண்டதும், அவள் தன்னிடத்துக் கொண்டுள்ள சந்தேகத்தைத் துயிலச்செய்யுமாறு அன்று தன்னையத்தைவிட்டுச் சற்றும் பிரியாதிருந்த தலைவி, உவகையோடும் அவளருகணைந்து, "எனக்குக் கண்போன்றினியாய். உன்னுடனன்றித் தனித்துச்செல்ல மனமிசையாது உன்னை இங்குக் காணாது நின் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன். நமது தினைப்புனத்தைப் பார்த்துப் பலநாள் ஆயிற்றே. நாம் போய்வருவோம், வா" என, அவளைக் கைப்பற்றி அழைத்துக் கொண்டு அப்புனத்தை அணுகிச் சுற்றிப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.



அப்பொழுது, பாங்கி தனக்கு இன்முகங் கொடாது கைவிட் டகன்றதைக் குறித்துச் சிந்தாகுலனாய் மேற்செயலொன்றுந் தோன்றாது, தன் மனத் தாபத்தைத் தணித்துக் கொள்ளுமாறு குறிப்பின்றி அங்குமிங்கும் உலவிச்சென்ற தலைமகன் அதிஷ்டவசத்தால் அவ்விடம் சேர்ந்தான். அங்குத் தலைவியும் பாங்கியும் பேசிக்கொண்டு கைகோத்துலவக் கண்டு, வரும்வழியில் ஆங்காங்குப் பறித்துத் தன் கைக்கொண்ட பல்லிணர் விரவிய நல்லிளந் தழையுடன் விண்ணிடை யிழிந்த விஞ்சையன் என்ன அவர்முன் நின்றான்.

அவனைக்கண்டு அவ்விருவரும் அவனை முன் பார்த்தறியார்போல வியந்து ஒருவரை யொருவர் நோக்கி நின்ற காலையில், அவன் தனது எண்ணத்தை வெளிப்படுத்தி அதை நிறைவேற்றிக் கொள்வதற்கு அதுவே தக்க சமயமென்று எண்ணிப் பாங்கியைப்பார்த்து முன்போல ஊரும் பேரும் கைம்மாவும் கலைமானும் கருங்கேழலும் பிறவும் வினவி அவரோடு சொல்லாடப் புகுந்தான். அதுகண்ட தோழி, "நான் முனியவும் என்னை விட்டகலாது, தான் கூறிய வழியும் போகாது இங்கும் என்னைத் தொடர்ந்து வந்து இவர்புகலும்பொய்வார்த்தையெல்லாம் இவர் கருத்துப் பிறிதொன்றெனக் காட்டுகின்றன. இவர் இங்குநாடி வந்தது கரியும் கலையும் அன்று நமது அரும்பெறற் பொன்னையே போலும்" என்று தெளிந்து அவரிருவர் முகத்தையும் உற்று நோக்கினாள். அவ்விருவர் முகமும் வாட்டந் தவிர்ந்து உவகை வீற்றிருக்கக்கண்டு, இருவருடைய நோக்குடம் பாட்டால் மனவொருப்பாட்டை யறிந்து, குலத்தாலும் நலத்தாலும் திருவாலும் உருவாலும் இருவரும் ஒத்திருக்கக் கண்டு தலைவியின் நல்வினையே இவர்களைத் தலைக்கூட்டி வைத்ததென நினைந்து பாங்கி பெருமகிழ்வுற்றாள்.

> காகத் திருக்கண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
> ஆகத்துள் ஓருயிர் கண்டனம் யாமின்று யாவையுமாம்
> ஏகத் தொருவன் இரும்பொழில் அம்பல வன்மலையில்
> தோகைக்குந் தோன்றற்கும் ஒன்றாய் வருமின்ப துன்பங்களே.

இவ்வாறு நினைந்து மகிழ்ந்தவள் இனி இவருக்கு முகங் கொடாமலும் உரையுதவாமலும் இருத்தல் முறையன்றென எண்ணி அவனுடன் நகையாடுவாள் போல "அந்தழை ஐய, ஆம்பலணிந்த ஓடையையன்றி ஓடையணிந்த ஆம்பலை நாங் கண்டிலோம்; பயமுற்று ஒரு தாளோடு நிற்கும் தாமரையையன்றி, பயமுற்று நான்கு காலோடு தாமரையை யாம் பார்த்திலோம்" என்றாள். இதனால் அவள் உடன்பட்டதை யறிந்து, இதுவே புகும் வாயிலாகத் தலைவன் தன் கையிலிருந்த தழையையுங் கண்ணியையும் நீட்டி "இம் மலையகத்தே கிடைத்தற்கரிய இவை நீர் உடுக்கவுஞ் சூடவும் உரியன. இவற்றை ஏற்று அணியும்" என்று கையுறையாகப் பாங்கியிடம் கொடுக்க, அவளும் அவற்றை ஆதரவோடு ஏற்றாள். அதன்பின் அவன் அவர்களை விட்டகன்று தன் பாங்கனைச் சேர்ந்து, அவனுக்கு நிகழ்ந்தவற்றை யெல்லாங் கூறி அவனுடன் மீண்டு தன் வீடு சென்றடைந்தான்.

அன்று தலைவியைத் தான் தனித்துக் கூடப்பெறானாயினும், அவளைக் கண்ணிற் காணப் பெற்றமையாலும், அவளது பாங்கியின் உடன்பாட்டைப் பெற்றமையாலும், இனி எல்லாம் தான் விரும்பிய வண்ணம் முடியும் என்ற நம்பிக்கையாலும் அன்றிரவை எளிதி னீந்திக் கரை கண்டான்.

இது நான்காநாட் செய்தி :


OUR OWN PUBLICATIONS

(5) 1. **Life of Barrister Savarkar**

By Chitra Gupta ... 1 8 0

**BOOKS BY SAVARKAR :—**

| | | | | |
|---|---|---|---|---|
| Hindu-Pad-Padashahi | ... Rs. | 3 | 0 | 0 |
| Hindutva | ... | 1 | 4 | 0 |
| An Echo from The Andamans | ... | 1 | 0 | 0 |

JUST PUBLISHED

2. **The Aravidu Dynasty of Vijayanagara**

Volume I. 1542 to 1614. ... Rs. 10 0 0

By Rev. Henry Heras, S.J.M.A.

*Prof. of Indian History, St. Xavier's College, Bombay.*

with a foreword by

Sir R. C. Temple.

3. **Economic Development**

*Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrial and Technical Education*

By Prof. Benoy Kumar Sarkar, M.A. Rs. 8

4. **England's Educational Policy in India**

By V V. Oak, B.A., S.T.C. ... Rs. 2 0 0

'FORWORD' WRITES:— "This book is a document that will rise up to accuse before the tribunal of history."

'MODERN REVIEW' :—"It is certainly a book which all amply repay perusal by every student of Politics."

**B. G. PAUL & Co., Publishers,**

2. Francis Joseph St., G. T. Madras.

(6) ஸ்ரீமத் வால்மீகி

**இராமாயண வசனம்.**

பண்டித நடேச சாஸ்திரியாரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படிதது ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் | 244 | பக்கம் | 6 காண்டம் ரூ. 15 |
| அயோத்தியாகாண்டம் | 501 | „ | |
| ஆரணியகாண்டம் | 254 | „ | |
| கிஷ்கிந்தாகாண்டம் | 226 | „ | |
| சுந்தரகாண்டம் | 260 | „ | |
| யுத்தகாண்டம் | 702 | „ | |
| சுந்தரகாண்டம் தனியே | | | ரூ. 2 4 0 |

**கே. மஹாதேவன்,** புஸ்தக வியாபாரம்,

1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை.

# தமிழ்ப் பாடம் 3.

## நள வெண்பா

### சுயம்வர காண்டம்.

(33-வது பக்கத் தொடர்ச்சி)

7. ஓடாத தானை நளனென் றுளனொருவன்
பீடாருஞ் செல்வப் பெடைவண்டோ—டோ
முருகுடைய மாதர் முலைநனைக்குந் தண்டா
ரருகுடையான் வெண்குடையா னங்கு.

பதப்பிரிவு:—ஓடாத தானை நளன் என்று உளன் ஒருவன் பீடு ஆரும் செல்வம் பெடை வண்டோடு ஊடா முருகு உடைய மாதர் முலை நனைக்கும் தண் தார் அருகு உடையான் வெள் குடையான் ஆங்கு.

அன்வயம்:—ஆங்கு, பீடுஆரும் செல்வப்பெடை வண்டோடு ஊடா, முருகு உடைய மாதர் முலை நனைக்கும் தண்தார்அருகு உடையான், வெள்குடையான், ஓடாத தானை நளன்என்று உளன்ஒருவன்.

கருத்து:—வண்டுகளடர்ந்த குளிர்ந்த பூமாலையை அணிந்தவனும், வெண்கொற்றக் குடையுடையவனும், பகைவருக்குப் பின்னிடாத சேனையை உடையவனும் ஆகிய நளன் என்ற அரசனொருவன் அங்கிருந்தான்.

பதவுரை.

பீடு - பெருமை
ஆரும் - பொருந்திய
செல்வ - சீர்பெற்ற
பெடை - பெண்வண்டுகள்
வண்டோடு - ஆண்வண்டுகளோடு
ஊடா - ஊடல் கொண்டு பிணங்க
முருகு - (அதனால் மலர்களிலிருந்து) தேன்
உடைய - அவிழ (அதனால் தன்னையணைந்த)
மாதர் - மாதர்களுடைய
முலை - முலைகளை
நனைக்கும் - நனைக்கின்ற
தண் - குளிர்ச்சி பொருந்திய
தார் - பூமாலையை
அருகு - (தனது மார்பிற்கு) அருகில்
உடையான் - உடையவனும்,
வெள் - வெண்மையான
குடையான் - குடையை உடையவனும்,
ஓடாத - (பகைவருக்கு முதுகுகாட்டி) ஓடாத
தானை - சேனையை உடையுவனும் (ஆகிய)
நளன் - நளன்
என்று - என்று
ஒருவன் - ஓர் அரசன்
ஆங்கு - அந்நகரத்தில்
உளன் - இருந்தான்.

விளக்கம்:—உளன் - இருந்தான் (பயனிலை). எங்கு உளன்? ஆங்கு - அந்த மாவிந்தநகரத்தில். யார்உளன்? ஒருவன் (எழுவாய்). அவன் யார்? நளன் என்று ஒருவன். அவன் எதை உடையவன்? தானை? - சேனை. அந்தச் சேனை எப்படிப்பட்டது? ஓடாத தானை-போரில் பின்னுட்டு ஓடாத சேனை. இன்னும் எது உடையவன்? தார் உடையான் - மாலையை உடையவன். மாலையை எங்கு உடையவன்? அருகு உடையவன் - மார்பிற்குச் சமீபத்தில், அதாவது, மார்பில் உடையவன். அந்தத் தார் எப்படிப்பட்டது? தண்தார் - குளிர்ந்த மாலை. அந்தத் தண்தார் என்ன செய்யும்? நனைக்கும்-நனையும்படி - செய்யும். தார் எதை நனைக்கும்? முலை நனைக்கும் - முலைகளை நனைக்கும். யாருடைய முலைகளை? மாதர் முலை - மாதர்களுடைய முலைகளை. முலையை நனைக்க நேர்வது எதனால்? உடைய - நெகிழ்வதால். எது உடைய? முருகு உடைய - தேன் வழிய. எப்படி முருகு உடைகின்றது? ஊடா - ஊடி. எதனோடு ஊடா? வண்டோடு ஊடா - ஆண்வண்டினோடு ஊடி. ஆண்வண்டோடு எதுஊடி? பெடை - பெண் வண்டு. அந்தப் பெடை எப்படிப்பட்டது? செல்வப் பெடை - சீர்பெற்ற பெண்வண்டு. இன்னும் அப்பெடை எப்படிப்பட்டது? ஆரும்பெடை - பொருந்திய பெண் வண்டு. என்ன பொருந்திய பெடை? பீடு ஆரும் பெடை - பெருமை பொருந்திய பெண்வண்டு. இன்னும் அந்த நளன் எதை உடையவன்? குடையான் - குடையை உடையவன். எப்படிப்பட்ட குடை? வெண் குடை - வெண்மையான குடை.

விரிவுரை—நாட்டினது வளத்தை முதற் செய்யுளாலும், நகரினது செல்வத்தையும் இன்பத்தையும் மாந்தர் தம் தன்மையையும் அடுத்த நான்கு செய்யுளாலும் காட்டியபுலவர், இச்செய்யுளால் அந்நாட்டு அரசனது பேரும் பெருமையும், இதற்கடுத்த செய்யுளால் அவன் உலகங் காத்த முறையும் செப்புகின்றார்.

மாலையிலுள்ள பூக்களை மொய்க்கின்ற வண்டுகளுக்குள் பெண்வண்டுள் தத்தம் ஆண்வண்டுகளோடு ஊடல் கொள்ள, அவ்வூடலைத் தணிப்பதற்கு ஆண்வண்டுகள் நெருங்குவதும் நெருங்கிய அவைகளைக் கோபத்தோடு பெண்வண்டுகள் வலிந்து விலக்குவதும் நேர்வதன் காரணமாய்ப் பூக்களுக்குள் உண்டாகும் கலகத்தால் கட்டழிந்து தேன் பெருகுமென்று, வண்டுபோன்ற சென்துக்களிடத்திலும் மாந்தர்க்குரிய தன்மையைக் கவி ஏற்றியுளர்.

குறிப்பு:—(1) மாது, என்னும் பதத்திற்கு அழகு என்று பொருள். அதை உடைய பெண்ணிற்கும் 'மாது' என்று பெயர் ஆகும். மாது என்னும் பதமே மாதர் என்றும் வரலாம். அப்பொழுதும் பெண், என்ற பொருளில் ஒருமையே குறிக்கும். அல்லது மாதர் என்பதைப் பல பெண்கள் என்று பன்மையாகவும் கொள்ளலாம். ஒரு தன்மை அல்லது குணத்தைக் குறிக்கும் பதமே சில சமயத்தில் அந்தத் தன்மை அல்லது குணத்தைப் பெற்றிருக்கின்ற பொருளுக்கும்வரும். காரிகை, என்பது பெண் என்னும் குறிப்பை உடையது. ஆனால் காரிகை என்னும் பதத்திற்கும் 'அழகு' என்று அர்த்தம். அந்தக் காரிகை (அழகு) என்னும் குணத்தை உடையவளுக்கும் 'காரிகை' என்று பெயர் ஆயிற்று. 'ஊர் சிரிக்கும்' என்ற வழக்கத்தில் ஊர் என்ற இடம் அந்த இடத்திலுள்ள சனங்களுக்குப் பெயர் ஆகின்றது. இப்படிக் குணம் இடம் முதலியவைகளைக் குறிக்கும் சொற்கள் அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட பொருளுக்கே பெயர் ஆகி நிற்கும்போது அந்தச் சொற்களுக்கு ஆகுபெயர் என்றுபெயர். மாது, காரிகை, எனும் இவை அழகு என்னும்குணத்தை மாத்திரம்காட்டும் பண்புப்பெயர்(பண்பு-குணம்). ஆனால் அந்தக் குணத்தையுடைய பெண்ணைக் காட்டும்போது ஆகுபெயர் (ஒரு சம்பந்தத்தால் ஆகின்ற



பெயர்.) குண சம்பந்தத்தினால் ஆனதால் குணவாகு பெயர். அப்படியே ஊர் சிரிக்கும், என்பதில் ஊர் என்னும் இடப்பெயர் ஊரிலுள்ளவர்க்கு ஆனதால் அது இடவாகு பெயர். இதுதான் ஆகுபெயரின் இலக்கணம். ஆகுபெயர்கள் தமிழிலக்கணத்தில் பதினாறு விதங்கள் இருக்கின்றன. அவைகளைப் பின்னொரு போது பார்ப்போம்.

2. ஊடா-(ஊடி). இந்தச் சொல் இங்குச் சாதாரணமாக வழங்கும் எதிர்மறை (negative) உருவத்தில் இருந்தாலும், வாஸ்தவத்தில் ஊடி என்ற உடன்பாட்டுப் (positive) பொருளையே உடையது. இப்படி உருவம் இருக்கும்போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறுதான் உடன்பாடு என்றும் அல்லது எதிர்மறை என்றும் தெரிந்துகொள்ள வேண்டும். 'இவன் என் வீட்டிற்கு வந்து கோபத்தோடு உண்ணாச் சென்றான்' என்ற வாக்கியத்தில் உண்ணா என்பது உண்ணாமல் என்ற எதிர்மறைப் பொருளது. 'என் வீட்டிற்கு வந்து சந்தோஷமாய் உண்ணாச் சென்றான்' என்னுமிடத்து 'உண்டு' என்ற உடன்பாட்டுப் பொருள் கொடுக்கும். இப்படி ஊடா உண்ணா காணா என்னும் உருவத்தில் வரும் சொற்கள், ஊடாச்சென்றாள் உண்ணாச்சென்றான் காணாச் சென்றான், என்று சென்றாள் சென்றான் என்பனபோன்ற வினைச்சொற்களைக் கொண்டு (verbs) அர்த்தம் முடிகின்றபோது அவை வினை யெச்சங்கள். இதே உருவத்தில் இருக்கும் சொற்கள் சில சமயத்தில் பெயர்ச் சொற்களைக் (nouns) கொண்டு முடியுமானால் அப்பொழுது பெய ரெச்சங்கள் ஆகிவிடும். ஊடா மனைவி, உண்ணா விருந்து, காணாக் கண், என்று வரும்போது பெயரெச்சம். அப்படி(வினையெச்சமா யல்லாது) பெயரெச்சமாக வரும்போது, ஊடாத மனைவி, உண்ணாத விருந்து, காணாத கண், என்று எதிர்மறைப் பொருளை மாத்திரம் தரும். பெயரெச்சத்தில் இவைகளுக்கு உடன்பாட்டுப் பொருள்இல்லவே இல்லை. காணாக் கண், என்பதில் காணா என்பது எதிர்மறைப் பெயர் எச்சம். காணாத என்பதுதான் அதன் சரியான உருவம். ஆனால் கடைசியில் இருந்த 'த' என்னும் எழுத்துக் கெட்டுப்போய்க் 'காணா' என்று மாத்திரம் எதிர்மறைப் பெயரெச்சமாய் நிற்பதால், அதைப்போல் வருகிற சொற்களுக்கு ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பது பெயர். உண்ணா மகிழ்ந்தான், என்னும்போது உண்டு மகிழ்ந்தான் என்று உடன்பாட்டு வினை எச்சமாகவும்; உண்ணாச் சோர்ந்தான், என்னும் போது உண்ணாமல் சோர்ந்தான் என்று எதிர்மறை வினையெச்சமாகவும்; உண்ணாக் குழந்தை, என்னும் போது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகவும்; இன்னும், புலிகள் புல் உண்ணா, என்னும்போது எச்சமேயல்லாமல் வினைமுற்றாகவும்; ஒரேசொல் ஒரே உருவத்தில் பலவிதமாய்த் தமிழில் வருவதைக் காண்க. (எச்சவினை என்பது ஆங்கிலத்தில் infinate verb; வினைமுற்று என்பது finate verb)

8. சீத மதிக்குடைக்கீழ் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் றனிக்காத்தான்—மாத
ரருகூட்டும் பைங்கிளியு மாடற் பருந்து
மொருகூட்டில் வாழ வுலகு

பதப்பிரிவு:—சீதம் மதி குடை கீழ் செம்மை அறம் கிடப்ப தாது அவிழ் பூ தாரான் தனி காத்தான் மாதர் அருகு ஊட்டும் பசுமை கிளியும் ஆடல் பருந்தும் ஒரு கூட்டில் வாழ உலகு.

அன்வயம்:—தாதுஅவிழ்பூந்தாரான், மாதர் அருகு ஊட்டும் பைங்கிளியும் ஆடல் பருந்தும் ஒரு கூட்டில் வாழ, சீதமதிக் குடைக்கீழ் செம்மை அறம்கிடப்ப, உலகு தனிக் காத்தான்.

கருத்து:—கிளியும் பருந்தும் தம்முள் இயற்கையாயுள்ள பகையையும் மறந்து ஒரு கூட்டில் ஒத்துவாழும்படி நளன் செங்கோல் வழுவாமல் குளிர்ந்த தன் குடைநிழலில் தனக்கெவரும் ஒப்பிலாவகை உலகத்தைக் காத்தான்.

பதவுரை.

தாது - மகரந்தப்பொடி
அவிழ் - உதிர்கின்ற
பூ - பூக்களால் கட்டிய
தாரான் - மாலையை அணிந்த நளன்,
சீதம் - குளிர்ந்த
மதி - சந்திரன் போன்ற
குடைக்கீழ் - தனது குடையின்கீழ்
செம்மை - நேர்மையான
அறம் - தருமங்கள்
கிடப்ப - தங்கியிருக்க,
மாதர் - மாதர்கள்
அருகு - தமது அருகில் வைத்து
ஊட்டும் - உணவு ஊட்டுகின்ற
பை - பச்சையான
கிளியும் - கிளிகளும்
ஆடல் - (கிளிபோன்ற பறவைகளோடு இயற்கையில்) போர் செய்யும்
பருந்தும் - பருந்துகளும்
ஒருகூட்டில் - ஒரேகூண்டில்
வாழ - சிநேகமாய் வாழும்படி
உலகு - உலகத்தை
தனி - நிகரில்லாமல்
காத்தான் - காத்தான்.

188986.

விளக்கம்:—காத்தான்-காப்பாற்றினான், (பயனிலை). யார் காத்தான்? தாரான் - மாலையை அணிந்தவன். (எழுவாய்). எப்படிப்பட்ட தாரான்? அவிழ் - அவிழ்கின்ற - உதிர்கின்ற. எது அவிழ் தாரான்? தாது அவிழ் தாரான்-மகரந்தம் (புஷ்பரேணு) சொரிகின்ற மாலையை அணிந்த நளன். அவன் எதைக்காத்தான்? உலகு - பூமியை. தாரான் உலகை எப்படிக் காத்தான்? தனிக் காத்தான் - தனி (unique) - நிகரில்லாதபடி காத்தான். அப்படி அவன் தனிக்காத்தது எந்தக் காரணத்தால்? கிடப்ப - தங்கியிருந்ததால். எது கிடப்ப? அறம் - தருமங்கள். எப்படிப்பட்ட அறம் கிடப்ப? செம்மை அறம் கிடப்ப-நேர்மையான தருமங்கள் தங்கியிருக்க செம்மை அறம் எங்கே கிடந்தது? கீழ் - கீழே. எதன் கீழ்? குடைக்கீழ் - குடையின்கீழ். அந்தக்குடை எது போன்றது? மதிக்குடை - சந்திரனைப்போன்ற குடை. சந்திரன் எப்படிப்பட்டது? சீதமதி - குளிர்ந்த மதி. தன்குடையின் கீழ் தருமம் நிலைத்திருக்க அந்தக் காரணத்தால் என்ன காரியம் நிகழும்படி நளன் உலகத்தை ஒப்பில்லாமற் காத்தான்? வாழ - வாழும்படி. எது வாழ? பருந்தும் கிளியும் வாழ. எங்கு வாழ? ஒரு கூட்டில் வாழ. பருந்தின் தன்மை எப்படிப்பட்டது.? ஆடல் பருந்து - போர் செய்தலைத் தனக்குத் தொழிலாக உடைய பருந்து. கிளி எப்படிப்பட்டது? பைங்கிளி - பச்சைக்கிளி. பச்சைக்கிளியின் தன்மை என்ன? ஊட்டும்கிளி - ஊட்டுகின்றகிளி. யார் ஊட்டும் கிளி? மாதர் (உணவு) ஊட்டும் கிளி. எங்கு வைத்துக்கொண்டு ஊட்டுகின்ற கிளி? மாதர் அருகு ஊட்டும் கிளி - மாதர்கள் பக்கத்தில் வைத்துக் கொண்டு ஊட்டுகின்ற கிளி.

**விரிவுரை** :—தமிழ் நூற்களில் பெரும்பான்மை அரசன் நாட்டைக் காத்தான் அளித்தான் என்று அவன் குடிகளுக்குச் செய்யும் கடமை காட்டப்பட்டிருக்குமே யல்லாது, ஆண்டான் என்று அவன் அதிகாரத்தையே நினைப்பூட்டும் சொற்கள் பொதுக வாரா. சக்ரவர்த்தியா யிருப்பவனைப்பற்றிப் பேசும்போது அவன் மற்ற அரசரை ஆண்டான் என்றும் குடிகளைக் காத்தான் என்றும்கூடத் தமிழாசிரியர் பிரித்துக் காட்டுவர். தமிழரசர் தம் நாட்டைக் காத்தலின்றி ஆள்வதறியார்.

பருந்தும் கிளியும் ஒரு கூட்டில் வாழ்வது, எளியோரை வலியோர் நலியாதிருப்பதற்கும், இயற்கையாய் வரும் பகையையும்கூட மறந்து உயிர்கள் ஒத்து வாழ்வதற்கும் அடையாளம். பருந்தும் கிளியும் ஒன்றாக வாழ்ந்தகூடு, வீட்டிலே பக்ஷிகளை அடைத்துவைக்கச் செய்து மாட்டும் கூண்டல்ல, பறவைகள் மரங்களிலே தமக்காகக் கட்டிக்கொள்ளும் கூடுகள். மாதர் அருகூட்டும் பைங்கிளி, என்றது மாதரும் பயமின்றிக் கையில் வைத்துச் சோறூட்டத்தக்க அவ்வளவு சாதுவான கிளிகள், என்று கிளிகளின் பொதுத்தன்மையைக் காட்ட வந்த அடைமொழிகள். (descriptive epithets). மாதர்கள் கையில் ஊட்டிய கிளிகள்தாம் பருந்தோடு சேர்ந்து வாழும் என்று சிறப்பித்துச் சொல்லவந்த (restrictive epithets) அடைமொழிகள் அல்ல. ஆடல், என்பதற்குப் போர் செய்தல் என்று அர்த்தம். ஆடல் பருந்து என்று, சாத்விகக் கிளிகளுக்கு மாறாகப் பருந்துகளின் பொதுவான துஷ்டத் தன்மையும் கீர்ட்டப்பட்டிருக் கின்றது. கிளியும் பருந்தும் போன்ற பறவைகளே இப்படி ஒத்து வாழ்ந்தன, என்றால் இயற்கையிலேயே ஒற்றுமையாயிருக்கவேண்டிய மாந்தரைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ! இந்த ஒற்றுமை காரியம், இதற்குக் காரணம் எவையோ வெனில், அரசனது அருளும் அறமும் என்று கவி காட்டுகின்றார். அரசனது குடை, நிழலளித்து உலகத்தைக் காப்பதற்கு அடையாளம். கருணை குளிர்ந்ததாதலால் அக்குடைக்குச் சீதமதி உவமையாயிற்று. அரசன் அன்போடும் அறத்தோடும் உலகத்தைக்காப்பதே கருத்தாயிருந்ததால் குடிகள் இன்புற்றுத் தம்முள் மாறுபாடின்றி வாழ்ந்தனர், என்று கூறுவதினின்று தமிழ்க் கவிகள் அரசியல் தத்துவத்தில் காரண காரியத் தொடர்புமுறை சிந்தித்திருந்த வண்ணத்தின் உண்மை நாம் ஊன்றிக் கருதத்தக்கது.

**குறிப்பு**:— ஒன்றன் பெயரைச் சொல்கின்ற சொல், பெயர்ச் சொல். ஆனால் வா போ புரள் புகு கிட வாழ் என்பன போன்று ஒரு காரியத்தைச் செய்விக்கும் சொற்கள் வினைச்சொற்கள். இனி இந்த வா என்னும் வினைச்சொல் பலமாதிரியாக வரும் :— (1) வந்தான் வருகிறான் வருவான், வந்தாள் வருகிறாள் வருவாள், வந்தார் வருகிறார் வருவார், வந்தது வருகின்றது வரும், வந்தன வருகின்றன வரும், வந்தேன் வருகிறேன் வருவேன், வந்தோம் வருகிறோம் வருவோம், வந்தாய் வருகின்றாய் வருவாய், வந்தீர் வருகின்றீர் வருவீர்.

இந்தப் பதங்களை எல்லாம் பார்த்தால், செய்த காரியம் எது (வருதல்)? அது செய்தது யார், அவனா அவளா அவரா அதுவா அவையா, அல்லது நானா நாங்களா, நீயா நீங்களா; செய்த காலம் எது, முன்னா இப்பொழுதா இனிமேலா; என்பவைகளை யெல்லாம் அறிந்து கொள்ளலாம். இவைகளை யெல்லாம் காட்டி முடிவதால் இப்படி வருகிறவைகளுக்கு எல்லாம் பொதுவாக வினைமுற்று என்று பெயர். அப்படிக்கில்லாமல், வந்த வருகிற வரும் என்றாவது வந்து வர வரின் என்றாவது நிற்குமானால், செய்த காரியம் எதுவென்றும் செய்த காலம் எதுவென்றும் தெரிகின்றதேயன்றி வேறு பதங்களோடு சேர்த்துப் பார்க்காமற் போனால் செய்தது யார் என்பது தெரியவில்லை யல்லவா. அது குறைந்திருக்கின்றது, ஆகையால் இம்மாதிரி வருபவைகளுக்கு எச்சர் என்று பெயர். (எச்சம். குறைவு). இப்படி வருகின்ற எச்சங்கள் பொருளில் பூர்த்தியாவதற்குச் சில சொற்களைச் சேர்ந்து முடியும். வந்த என்பதை ஒரு சொல் கொடுத்து முடிக்க வேண்டுமானால் வந்த பையன், வருகின்ற பையன், வரும் பையன், எனப் பெயர்ச் சொற்கள்தான் அதன் பின் அர்த்தத்தில் பொருந்தி வரும். இப்படிப் பெயர்ச்சொல்லைக் கொண்டுதான் முடியக்கூடிய எச்சங்களுக்குப் பெயர் எச்சம் என்று பெயர். வந்த சொன்னான், என்று சொன்னால் அர்த்தமே இல்லையல்லவா? ஏனென்றால், சொன்னான் என்னும் அது கொண்டு முடியக் கூடாத சொல் வினைச்சொல்- ஆனால், வந்துசொன்னான் என்று முடியக்கூடும். வந்துசொன்னான், வரச்சொன்னான், என்பவைகளில் வந்து வர என்பனபோன்ற வினைச் சொற்கள் வேறு ஒரு வினையையே கொண்டுமுடியும். அப்படி வினையையே கொண்டு முடியக்கூடிய வினைச் சொற்களுக்கு வினையெச்சம் என்றுபெயர். வந்த, பேச, நிற்க போன்ற சொற்களுக்குக் கொண்டுமுடிகிற பெயர் குறைவாயிருப்பதால் அவைகளுக்குப் பெயரெச்சம் என்றும், வர பேசி நின்று போன்ற சொற்களுக்குக் கொண்டுமுடிகிற வினைச்சொற்கள் குறைவாயிருப்பதால் இவைகளுக்கு வினையெச்சம் என்றும் பெயர்வந்தது. பெயரெசசம் வினையெச்சம் இரண்டும் வினைச்சொற்கள்தாம். முன்னது பெயரெச்சம் என்று இருக்கிறபடியினால் அது பெயர்ச் சொல்லோ வென்று மயங்காதீர்கள். பெயரைக் கொண்டுமுடிகிற எச்சவினையாதலால் அது பெயரெச்சம். (வரும் பேசும் நிற்கும் என்பனபோன்ற உருவங்கள், வரும் பையன், பேசும் கிளி, நிற்கும் குதிரை என்ற வாக்கியங்களில் பெயரெச்சமாகவும்; அவைகளே மறுபடி, மழைவரும், கிளிபேசும், குதிரைநிற்கும் என்று மாறினால் வினைமுற்றுக்களாகவும் ஆவதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.)

இனி, வினையெச்சங்கள், வர செய்ய அடிக்க, என்பன போன்றிருந்தால் மூன்றுவிதத்தில் பொருளைக்காட்ட உதவிசெய்யும். அது காரியப்பொருளில் வருவது சாதாரணம். 'நெல் விளைய மழைபெய்தது.' என்ற வாக்கியததில் விளைய என்பது எச்சம். அது அர்த்தத்தில் பெய்தது என்னும் வினைச்சொல்லைக் கொண்டு முடிவதால் வினையெச்சம். மழைபெய்தது காரணம், அந்தக் காரணத்தால் நெல் விளைந்தது காரியம். ஆகையால் விளைய என்பது, 'விளைவதற்கு'' என்று காரியப் பொருளில் வந்த வினையெச்சம். இந்த வாக்கியத்தைச் சிறிதுமாற்றி 'மழைபெய்ய நெல்விளைந்தது' என்று சொன்னால் காரண காரியமும் முறையாய் விளங்கும். பெய்ய, என்பது விளைந்தது என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிகிற வினையெச்சம். மழை பெய்ததால், என்று காரணதைக் காட்டுகின்றது. இந்தக் காரணத்தால் உண்டான காரியம் நெல்விளைதல். மழை பெய்வதற்காக நெல் விளையவில்லை. நெல் விளைவதற்காகத்தான் மழை பெய்யும். ஆகையால் மழை பெய்ய நெல் விளைந்தது என்னும்போது, பெய்ய என்பது காரணப் பொருளில்வந்த வினையெச்சம். காரணம் காரியம் இரண்டையும் காட்டாமலும் கூட இந்தமாதிரி வினையெச்சங்கள் வரலாம். "சூரியன் உதிக்க இராமன் வந்தான்'' என்பதில் உதிக்க என்னும் வினையெச்சம்



எதைக் காட்டுகின்றது? சூரியன் உதிப்பதற்காக இராமன் வந்ததில்லை யாகையால் அது காரியப் பொருள் அல்ல. சூரியன் உதித்ததாலும் இராமன் வந்ததில்லையாகையால் அது காரணப் பொருளுமல்ல. சூரியன் உதித்ததும் இராமன் வந்ததும் ஒன்றாய் நிகழ்ந்தன என்பதையே 'உதிக்க' என்னும் அவ்வினை யெச்சம் காட்டுகின்றது. இப்படி இரண்டு நிகழ்ச்சிகளும் ஒன்றாய் நேர்ந்தன என்பதைக் காட்டும் வினையெச்சங்கள் உடனிகழ்ச்சிப் பொருளில் வந்த வினையெச்சங்கள்.

காமர் கயல்புரள, என்று ஆரம்பிக்கும் முதல் செய்யுளில் புரள நெகிழ அவிழ என்பன வினையெச்சம். புரள்வதால் நெகிழ்வதால் அவிழ்வதால் என்று காரணத்தைக் காட்டி (அந்நாடு நிலமகளின் கண்போன்ற) தகைமைத்து, என்ற வினையைக் கொண்டு முடிகின்றன. ஆதலால் அவை காரணப்பொருளில் வந்த வினையெச்சங்கள். பிறகு, நின்றுபுயல்வானம், என வாரம்பிக்கும் மூன்றாவது செய்யுளில் புகுந்து என்பது புகுந்ததால் என்று காரணத்தைக் காட்டிக் கமழும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிகின்ற காரணப்பொருளில் வந்த வினையெச்சம்.

மறுபடி இந்தச் செய்யுளில், கிடப்ப வாழ என்று இரண்டு வினையெச்சங்கள் இருக்கின்றன. இவைகளில் கிடப்ப என்பது கிடந்த காரணத்தால் என்று காரணத்தைக் காட்டும். அந்தக் கிடப்ப என்னும் வினையெச்சம் வாழ என்னும் மற்ற வினையெச்சத்தைக் கொண்டு முடிகிறது. வினையெச்சம் வேறொரு வினைச்சொல்லைக்கொண்டு முடிய வேண்டுமென்னும் விதியிருக்கின்றதே ஒழிய வினைமுற்றைத்தான் கொண்டு முடிய வேண்டுமென்னும் விதியில்லை. வினையெச்சம் கொண்டு முடிகின்ற பதம், வினைமுற்றாய் இருக்கலாம், வினையெச்சமாய் இருக்கலாம் அல்லது பெயரெச்சமாயும் இருக்கலாம். உழுது விதைத்தான். இங்கு உழுது என்னும் வினையெச்சம் விதைத்தான் என்பதோடு சேர்கின்றது. உழுது விதைக்க நெல் விளையும். இங்கு உழுது என்னும் வினையெச்சம் விதைக்க என்னும் மற்றொரு வினை யெச்சத்தையே சேர்ந்து பொருள் தரும். உழுது என்பது விளையும் என்பதைக் கொண்டு இங்கு முடிவதற்கு அர்த்தம் இடம் தராது. உழுது விதைத்த வயலே விளையும், என்னும்போது உழுது என்னும் வினையெச்சம் விதைத்த என்னும் பெயர் எச்சத்தையும் கொண்டு முடிகிறதல்லவா?

ஆதலால், கிடப்ப என்னும் வினையெச்சம் வாழ என்னும் மற்ற வினையெச்சத்தைக் காரணப் பொருளில் கொண்டு முடிகிறது. இனி, வாழ என்னும் வினையெச்சம், காத்தான் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடியும். இது காரியப் பொருள். வாழ்வு ஆகிய காரியம் அல்லது பயன் அடைய நளன் உலகைக் காத்தான். அந்த வாழ்வு என்னும் காரியத்திற்கு அல்லது பயனிற்குக் காரணம் அறம் கிடத்தல். ஆதலாற்றான், அரசன் தர்மங்களைப் பரிபாலிப்பதுவே குடிகளின் ஒற்றுமையான வாழ்விற்குக் காரணம் என்பது புகழேந்திப் புலவரது கொள்கை என்று தேர்ந்து அக்கொள்கையின் சிறப்பும் அறியலானோம். வினையெச்சங்களின் இலக்கணம் தெரியாமற்போனால் கிடப்ப வாழ என்னும் இரண்டையும் காரியப் பொருளாய்க் கொண்டு அறம் கிடக்கவும் கூட்டில் வாழவும் காத்தான் என்று ஒரே வினைமுற்றைக் கொண்டு முடித்துவிட்டுக் கவியினது இருதயத்திற்கும் நமக்கும் வெகுதூரமாய் நிற்க நேரிடும். கவியினுடைய உண்மையான கருத்தை யறிவதற்குச் சிறிது இலக்கணம் தெரியவேண்டியது அவசியம். அந்த அளவு இப்பாடங்களின் மூலமாய்க் கற்றுக் கொள்வதும் எளிது.

# மதிப்புரை.

## பருந்தும் நிழலும்.

[ஆசிரியர், ஸ்ரீமான் A. பாலகிருஷ்ணன், B.A. M.L. திருவல்லிக்கேணி, சென்னை. விலை ரூ. 1.]

மேல் நாட்டாரைப் பற்றிப் பொதுவாக இந்திய ஜனங்கள் கொள்கின்ற அபிப்பிராயம், வர்த்தகமும் உத்தியோகமும் செய்து பொருள் வளர்ப்பதற்கு என்று கடல்தாண்டி இங்கு வந்திருப்பவர்களைப் பார்த்தும், ஆங்கிலத்திலேயே அங்கு அற்பங்கள் என்று தள்ளப்பட்ட சில கடையாய நாவல்களைத் தழுவி வயிறு கழுவுதற்காகவே தமிழில் எழுதி யிருக்கின்ற புத்தகங்களைக் கொண்டும், சீமைக்குப் போய்வந்தவர்களில் சிலம் குலைந்த சில இந்தியர்களின் நடவடிக்கைகளைக் கண்டும், கொண்டாடுவார்க்கு நல்லதாயும் வெறுப்பவர்க்குக் கெட்டதாயும் அமைகின்றது. இந்த அடையாளங்களே ஆதாரமாக மேனாட்டை நன்குமதிப்பதும் வெறுத் திகழ்வதும் இரண்டும் சரியல்ல. அந்நாட்டில் ஆன்ம உணர்ச்சியடைந்து பொலிவுபெற்று விளங்கிய மேதாவிகள் உய்த்துணர்ந்து எழுதிவைத்த நூல்களே ஆங்கிலேயரின் மெய்த்தன்மை யாதெனக் காட்டுவதோடு அவைகளைக் கற்பதால் நமக்கு அளவிலா நன்மையும் பயக்கும். ஆங்கிலம் கற்றறியாத் தமிழருக்கு அன்னவித நூல்களை மொழிபெயர்த்துத் தருவோர் இருவருக்கும் பேருதவி செய்கின்றவராவர்.

அத்தகைய உதவியைச் செய்துவைக்க நமது நண்பர் ஸ்ரீமான் A. பாலகிருஷ்ண பிள்ளை பருந்தும் நிழலும் எழுதித் தந்தார். இதில் கார்லைல் எமர்ஸன் போன்ற ஆங்கிலப் பேரறிஞர் பன்னிருவர் கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன. அன்னோர் எழுதிய நூற்கள் கடல் போன்று அளவிலாதனவாயினும், நமது நண்பர் அக்கடலுள் குளித்து முத்தைத் திரட்டினாற்போல் நடையின் பெருமையாலும் கருத்தின் அழகாலும் வாய்மையின் நிலையாலும் உயர்ந்த கட்டுரைகளையே தேர்ந்தெடுத்துத் தமிழால் தமிழருக்குப் பயன்படுமாறு செய்த விதத்தை நினைத்து மகிழ்கின்றோம். பருந்து செல்வழி நிழலும் தவழுமாறுபோலக் கருத்தைத் தொடர்ந்து உரைநடையும் பயின்றுவரும், எனும் குறிப்பால் இம்மொழிபெயர்ப்புக் கட்டுரைத் தொகைக்கு அப்பெயர் கொடுத்தார்.

நூலளவு உரையும் வரைந்து இவர் கட்டுரையை விளக்கிவைத்த திறத்தைப் பெரிதும் பாராட்டுகின்றோம். அவ்வந்த ஆசிரியர் தன்மையும், கட்டுரையின் சுருக்கமும் வரைந்து, கருத்தும் வழியும் இதுவெனக் காட்டி, அரும்பொருள் விளக்கத்தோடு இவர் எழுதியுள்ள உரைப்பாகம் கூடவேயிருப்பதால், நூலைப்படிக்கும்போது பொருள் விளங்கவில்லையே என்று யாரும் கைசோரவேண்டா. முதல்நூலின் சுவை கெடாது இருக்கவேண்டும் என்னும் ஆசையால் இம்மொழிபெயர்ப்பாசிரியர் தமிழர் கண்டறியாதபடி சில வாக்கியங்கள் அமைத்திருக்கலாம், உண்மையே. வடமொழிச்

சொற்களை விலக்கவேண்டும் என்னும் கொள்கையாலும் சில விடங்களில் பொருள் தெளிவின்றிக் கிடக்கலாம். எனினும் அவரது உரையின் உதவியாலும் ஒருமுறைக்குப் பன்முறை ஆழ்ந்து படிப்பதாலும் பொருள் புலப்படாது போகாது. இந்நூல் மெய்வருந்தக் கூலி தரும். படிக்கின்றவர்கள், பொதுவாய்ப் பொருள் விளங்காத இடமெல்லாம் எழுதியவர் பிழையென்று எண்ணித் திருப்தி யடைந்து புத்தகத்தை அவமதித்து விடுகின்றனர். தமக்கே சிறிது புத்தியோ பழக்கமோ கவனமோ முயற்சியோ குறைவா யிருப்பதாற்றான் விளங்கவில்லை என்று எண்ணுவதும் தகும். ஆங்கிலம் கற்றவர்கள்தாம், பி. எ. பட்டமும் பெற்றவர்கள்தாம், எமர்ஸனையும் டிகுன்ஸியையும் எடுத்த மாத்திரத்தில் படித்துப் பிரயாசை யில்லாமல் அர்த்தம் தெரிந்துகொள்ளக் கூடுமா! நூற்றிலே ஒருவர்க்குத்தான் அவை தெளிவாக விளங்கும். முதல்நூல் எளியதா யிருந்தாலேகூட அதைத் தெளிந்த நடையில் மொழிபெயர்ப்பது வெகு கஷ்டம். அப்படியிருக்க அந் நூல்கள் ஆதிபாஷையிலேயே கடினமாயிருக்கப் பிரதிபாஷையில் சுலபமாக வந்துவிட வேண்டுமென்று எண்ணுவது நியாயமல்ல. எல்லோரும் இந் நூலைப் படித்துணர வேண்டுமென்ற விருப்பத்தால், படிப்பதற்கும் நடையமைப்பு இடையூறா யிருக்கின்றதென்று விடாதபடி வேண்டுகின்றோம். தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒருங்கேவல்ல ஸ்ரீ அனவரதவிநாயகம் பிள்ளை அவர்கள் வியந்தெழுதிய சிறப்புப்பாயிரம் ஒன்றே இந்நூலின் பெருமைக்குச் சான்று போதும்.

அழகிற்கு அழகு செய்ய யாரும் முற்படுவர். ஆதலால் ஒன்றிரண்டு நாமும் இந்நூலின்கண் திருத்திவைக்க நினைக்கும்படி நேர்கின்றது. வடமொழியைக் கடிந்துவிட்டுக் கட்டுரைகள் தமிழில் எழுதவேண்டும் எனும் நியதியில்லை. இயற்கையாக வடசொல் ஒன்று வாக்கியத்தில் பொருந்துமெனில் அதை விலக்கித் தமிழ்த் தொடர் ஒன்று வலிந்து தேடி அமைப்பதால் எது பயன். இதனால் ஆரியத்திற்கு ஒரு நஷ்டமுமில்லை. தமிழ் வாக்கியந்தான் நடையிற் றடையுறும். 'சதுரப்பாடுடையவர்' என்பதிலும் 'சாமர்த்தியசாலி' என வழங்குவது வசன நடைக்கு இனிமையும் தெளிவும் தரும். நற்றமிழ் எழுதும்போது வடமொழி வருவதே இயற்கை. இந்நூலின் சிறப்புப்பாயிரத்தில் ஸ்ரீமான் அனவரத விநாயகம்பிள்ளையவர்கள் இன்றியமையா திருந்தாலன்றி வடமொழியை விலக்கவேண்டுமென்று கூறுபவராய்க் "கூடியவரை தமிழ்ச் சொற்களையே வழங்கல் வேண்டும் என்று இந் நூலாசிரியர் கொண்ட நியதி பாராட்டற்பாலது" என்று எழுதிய வாக்கியத்திலேயே ஆசிரியர் என்று மருவியும் நியதி என்று சுயமாக வேயும் வடமொழிகள் அவரை யறியாமலே வந்திருக்கின்றன. இவரே பின்னும் காவியேதிகாசங்களும், என வடமொழிகளை மாத்திரமே யல்லாது அம்மொழிக்குரிய சந்தியையும் அமைத்து எழுதுவர். ஆதலால் இயற்கைக்கு மாறுய்ச் செய்வது எளிதன்று. நலமுமன்று.

வடமொழி விலக்க நினைத்த இந்நூல் ஏற்கப்படாத சில சொற்களை அவசியமில்லாமல் ஏற்றுக்கொண் டிருக்கின்றது. சில்லறை, தாறுமாறு, தேட்டை, பெண்டு போன்ற இலக்கியத்தில் காணாத சொற்கள் வந்திருக்கின்றன. கூடியவரையில் ஆன்றோர் ஆண்ட பதங்களையேகொண்டு நம் கருத்தை வெளியிட முயல்வதால் நமக்கும் பிறர்க்கும் நம் பாஷைக்கும் உண்மையான பயனுண்டாகும். இலக்கியம்காணாச் சொற்களைக் கொண்டு பாஷையை வளர்ப்பது வளர்ச்சியாகாது. சில்லறையும், தாறுமாறும் நாம் படித்தவரை இலக்கியங்களில் கண்டதில்லை யாதலால் இவ்வாறு கூறினோம் மற்று, அவை எவ்விலக்கியங்களிலேனும் இருக்குமாயின் இக்குறை பொருந்தாது.

இவ்வாசிரியர் பதங்களைப் புணர்த்த மிகவும் பயப்படுகின்றார். இந்நூலைப் படிக்கத் தகுந்தவர் எவரும் சுலபமாய்ப் புணரும் பதங்களைப் பிரிக்க இயலாமல் இடர் உறார். இவ்இருவர் என்பதிலும் 'இவ்விருவர்' என்பதே படிப்பதற்கு எளிது.

இவைகளல்லாமல் வாக்கியங்கள் சில அமைப்பில் ஆங்கிலத்தை முற்றிலும் பின்பற்றி வருகின்றன. ஆங்கிலத்தில் ஒருமைப் பெயர்ச் சொற்களுக்குமுன் ஒரு (The article a) வரவேண்டியது போன்ற நியதியும் அவசியமும் தமிழிற்கில்லை. உதாரணமாக, "அவர் ஒரு கேள்வி கேட்பவர்—ஓர் இழிவுபடுத்துபவர்-ஆகாது, ஓர் உபாத்தியாயராகவும் ஓர் பெருமைப் படுத்துபவராகவும், ஒரு சதுரப்பாடானவர் என்பது மட்டும் அன்றி ஓர் அறிஞராகவும் இருக்கின்றார்" என நூலின் 71-வது பக்கத்தில் வாக்கியமொன்று காண்கின்றோர். தமிழில் 'ஒரு' என்பது எண்ணுப் பெயராகவேவரும். தமிழிலே வாக்கியத்திற்கு நடுவே தொடர்ச்சி பிறழ்ந்து வேறொரு வாக்கியமும் வருகின்ற வழக்கமில்லை.—ஓர் இழிவுபடுத்துபவர்—என்று (Parenthesis) வருவது ஆங்கிலத்திற்கே உரியது. அதனால் அழகேனும் தெளிவேனும் ஏற்படுமானால் ஆங்கில அமைப்பை ஏற்றுக்கொள்ள யாதும் தடையில்லை. ஆனால் இங்கு அவ்விரண்டி லேதேனும் உளதோ என்றுதான் நாம் சந்தேகம் கொள்கிறோம். இந்த வாக்கியத்தையே, "அவர், இழிவுபடக் கேள்வி கேட்கும் ஒருவராகாது, பெருமைபெறப் போதிப்பவராகிச் சாமர்த்திய சாலியேயன்றி அறிஞருமாயிருக்கின்றார்" என்றுமாற்றினால் பருந்தும் நிழலும் பொருந்துகின்றதென நினைக்கின்றோம்.

அவ்விதமே, ஆங்கிலத்தில் pronoun எங்கும் வருவது போல் தமிழிலும் வருவித்துக் கொள்கின்றார். உதாரணமாக, "அதன்பிறகு அவள் என்னோடு விளையாடவும் வேடிக்கை செய்யவும் ஆரம்பித்து, அவளது வயதிற்குத் தகுந்தபடியே அல்லது அவளது உறுதிக்கு உரியதன்றி என்கையை நாணங்காட்டாமலே அவளது மடிமீதுள்ள மலர்களின்மேல் வைத்தனள்" எனவொரு வாக்கியம் 3-வது பக்கத்தில் வந்துளது. இதற்கு மாறாக, "அதன்பிறகு, என்னோடு விளையாடி வேடிக்கை செய்ய ஆரம்பித்து அவள், உறுதிக்கு உரியதன்றி வயதிற்குத் தகுந்தபடியே நாணங்காட்டாமல் என்கையைத் தன் மடிமீதுள்ள மலர்களின்மேல் வைத்தனள்," என்று ஆக்கினால் நான்கிலே மூன்று 'அவள்' அகலும்.

இவைபோல் இன்னும் சில ஆங்கிலப்பழக்கம் இந்நூலில் தோன்றுகின்றன. "நமக்கென வேலியிடப்பட்டுச் சொந்தமாக்கப்பட்டதாகவும்" என்பதுபோன்ற செயப்பாட்டு வினை நிறைந்த வாக்கியங்கள் பல. நமக்கெனவேலியிட்டுச் சொந்தமான..." என்றாலேபோதும், ஆங்கிலத்தில் 'அல்லது'(or), உம் (and) வந்தாலொழியப் பொருள் படாதெனினும் தமிழில் அவை அத்தனை தேவையில்லை. "ஆகவே, பணத்திலும், அல்லது, பணத்திற்கு ஈடானதிலும், பணத்தை வைத்திருப்பதிலும், ஏதோ முறையின்மையும் தவறும் இருந்தன என்பதை உணர்ந்தேன்," என்னும் கருத்தையே, "ஆகவே, பணத்திலும், அதற்கீடான மற்றதிலும், அதை வைத்திருப்பதிலும், முறையின்றித் தவறேதோ இருந்ததென உணர்ந்தேன்", என்று கூறலாம்.

இவையெலாம் நாம் எடுத்துக் காட்டினோம் ஆயினும் மொழி பெயர்த்துப் பார்த்திருப்பவர் எவரும் இவைகளைக் குற்றமென்று கருதார். ஆங்கில நூலைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு பார்த்துப் பார்த்து எழுதும்போது நம்மை யறியாமலே இத் தகைய அமைப்புக்கள் வந்து புகுந்துவிடுவது சகவாச தோஷமே. இயற்கையில் இவ்வாசிரியர் நற்றமிழ் எழுத வல்லர் என்பதை, அவர் எழுதியுள்ள முன்னுரையும், திவான் பகதூர் வி. மாசிலாமணிப் பிள்ளைக்குச் சமர்ப்பித்த உரிமையுரையும் ஐயமின்றிக் காட்டுகின்றன.

---



எமர்ஸன் எழுதிய

# இராஜ்ய தந்திரம்.

("Politics" by Emerson)

மொழி பெயர்ப்பு.

இராஜ்ய விஷயங்களை நாம் கையாளும் காலத்தில், அதனது அரசியல் தனுதாயம் ஆசாரம் போன்ற முறைகள் அநாதிகாலமாய் இருந்துவருவதாக எண்ணிக் கொள்ளக் கூடாது. நீயும் நானும் பிறப்பதற்கு முன்னேயே அந்த முறைகள் நடை முதலில் வந்திருக்கலாம். அதனாலேயே அவை பூர்வகாலத்தில் இருந்தவை என்று எண்ணுதல் பிழை. இதுவன்றி, இராஜ்யத்தில் வாழும் குடிகளைக்காட்டிலும் இராஜ்ய முறைகள் உயர்ந்தனவல்ல என்பதும், எப்பொழுதாவது தனிவிவகாரம் ஒன்றைத் தீர்ப்பதற்கு ஒருவன் செய்த சூழ்ச்சியே பிறகு பொதுச் சட்டங்களும் வழக்கங்களும் ஆய்விடுகின்றன என்பதையும், பண்டைநாள் தொடங்கி வருகின்றனவென்று நாம் நினைக்கின்ற அந்த முறைகளுக்கு இணையாக நாமும் இப்பொழுது புதியமுறைகள் ஏற்படுத்தவும், இல்லையெனில் அவைகளை மாற்றவும் கூடும் என்பதும், முன்முறைக்கு நிகராக மாத்திரமல்லாது அவைகளைவிட மேன்மையான முறைகளை நாம் அமைத்துக்கொள்வதும் இயலும் என்பதும், ஆகிய இந்தவித நினைவுகள் ஒருபோதும் நம் மனதைவிட்டு அகலாமல் காக்கவேண்டும். வயது முதிரா வாலிபர்களுக்குப் பொதுஜன வாழ்க்கை ஒரு பெரும் மாயம். நடுநிலையாகச் சில முறைகளும் பேர்களும் மனிதர்களும் வழக்கங்களும் சனசமூகத்தில் (society) ஆலமரம்போல் வேர் ஊன்றிச் சலிக்காமல் அமர்கின்றனவென்றும், இவைகளைச் சுற்றித்தான் பிறவெல்லாம் வந்து இயன்றவாறு அவ்வப்போது பொருந்துகின்றன வென்றும் அவ்விளையோர் எண்ணுகின்றனர். ஆனால் இராஜ்யதந்திர அனுபவத்தில் முதிர்ந்தவர்க்குச் சனசமூகம், வெள்ளமும் காற்றும் போல் நிலையற்றது வென்பது தெரியும். மூலஸ்தானமும் ஆணிவேரும் அரசியல் தந்திரத்தில் இல்லை என்பதை நம்முதியோர் உணர்வர். மேடு மடுவாகும், மடுவும் மேடாகும். இன்றைக்குத் தூசியாய்ப் பறந்தது நாளைக்கு மலையாய் நிற்கும். மலையாய் நின்றதும் ஒரு காலத்தில் தூசியாய்ப் பறக்கும். ஒவ்வொருவர் ஒவ்வொரு சமயம் தோன்றிச் சனசமூகத்தின்நடுவே மலையாக வளர்ந்து மற்றதெல்லாம் தம்மையே சுற்றி வரும்படி செய்துவிடுகின்றனர். வல்லமையால் இந்தவிதம் செய்யுமவர் வாழ்வு சில காலம். வாய்மையால் உலகத்தைத் தம்பால் வசியம் செய்துகொண்டவர் வாழ்வோ அவ்வுலகு உள்ளளவும் நிலைநிற்கின்றது.

[இந்தச் சந்தர்ப்பத்தில் எமர்ஸன், வல்லமையால் உலகத்தை வயப்படுத்திச் சிலகாலம் இருந்தவர்க்குக் கிராம்வெல் (Cromwell) என்பவரை ஆங்கில சரித்திரத்திலிருந்தும், வாய்மையால் எந்நாளும் உலகிற்கோர் ஆதாரமாய் அமைந்தவர்க்குப் பிளேடோ (Plato) என்பவரைக் கிரேக்கர் நாட்டிலிருந்தும், எடுத்து உதாரணமாய்க் காட்டுகின்றார். இவர்களுக்கு நிகராக நம்நாட்டில் முறையே சந்திரகுப்த அரசனையும் கௌதம புத்தரையும் நினைவிற் கொள்ளலாம்.]

ஆனால் இராஜ்ய தந்திரம் அதற்குவேண்டிய அஸ்திவாரத்தின்மேலே நிற்கின்றது. அதை இலேசாகப் பாராட்ட முடியாது. ஆள்வதற்கு அரசன் என்று ஒருவன் இல்லாது ஜனங்கள் தங்களைத் தாங்களே தேர்ந்தெடுத்து இராஜ்ய காரியங்களை நடத்திக்கொள்ளும் நாடுகளில் (அமெரிகா போன்ற ரிபப்ளிக்குக்கள்), கொண்ட கொள்கைகளையும், வாழ்கின்ற வழியையும், ஜனங்களின் தொழில்களையும், வர்த்தகம் கல்வி மதம் போன்ற விஷயங்களையும், ஓட்டு எடுத்து (votes) வெகு எளிதில் ஆக்குவதும் அழிப்பதும் கூடுமென்றும்; பத்துப்பேரைக் கூட்டிவைத்து ஓட்டுப்போடச் செய்துவிட்டால் எந்த அசட்டுத் திட்டத்தையும்சட்டமாக நிறைவேற்றிச் சனங்கள் தலையிலேசுமத்தி விடலாமென்றும், வீணாக எண்ணி விவகரிக்கும் பாலிய உத்தியோக அதிகாரிகள் பலர் நிறைந்திருப்பர். ஆனால் அறிவு முதிர்ந்தவரோ அவ்வாறு மதியார். மணலை எடுத்துக் கயிறுக்க முயன்றால் அது திரிக்கும்போதே உதிர்ந்துவிடுவதுபோல் அசட்டுச் சட்டங்கள் அழிந்துவிடும் என்பது இவர்களுக்குத் தெரியும். தேக பலத்தால் ஒரு பதவியை அபகரித்துக்கொண்டவனை வெகு சீக்கிரம் தொலைத்துவிடலாம். மனதின் எண்ணத்தினது ஆழத்தால் செய்கின்றவர்களே என்றைக்கும் அழியாதபடி செய்துவைக்கின்றனர். எந்த எந்தக்காலத்தில் எந்த எந்த ஜனங்கள் எந்த எந்த விதமான அரசாட்சிக்கு உடன்படுகின்றார்களோ, அந்த அந்த முறை அந்த அந்தக் காலத்தில் அவ்வச்சனங்கள் அடைந்திருக்கின்ற மனத்தேர்ச்சியையே பொருந்தியிருந்து அத்தேர்ச்சியின் தன்மையைக் காட்டிவைக்கும் அறிகுறியேயாகும். இருக்கின்ற விஷயங்களை ஞாபகக் குறிப்பாகச் சட்டங்கள் குறித்துவைக்குமே யல்லாது அவை தாமே விஷயங்களின் போக்கை ஆக்கவும் மாற்றவும் முடியாது. ஆதலால் குடிகளின் குணத்தையும் மனவளர்ச்சியையும் பின்பற்றியே அரசியல் தொடர்ந்து வருவதே இயற்கையாகும். குடிகளின் குணவளர்ச்சிகளை சட்டசபை கட்டி இழுத்துக்கொண்டு முன்போவதென்பது இயலாத காரியம். தேசச் சட்டநிர்மாணங்களை நாம் அதிகமாய் மதிக்கின்றோம். இது மூடபக்தியே—தேசத்தவர்களுக்கு இருக்கின்ற குணத்தி னளவன்றி அச்சட்டங்களுக்குச் சக்தி அதிக அளவு ஏற்படாது. சட்டங்களின் ஜீவனெல்லாம் மனிதர்தம் மனத் தேர்ச்சியேயாம். "நேற்று நாம் இது இது சரியென்று சம்மதித்தோம், ஆனால் இந்தவிதியைப்பற்றி இன்றைக்கு என்ன தோன்றுகின்றது உனக்கு!" என்று கேட்டவண்ணமாயல்லவோ தேசச்சட்டங்கள் எந்நாளும் நிற்கின்றன. பார்க்கப்போனால் சட்டங்களெல்லாம் நாணயங்கள் போன்றவை. அதில் நமது உருவத்தையே முத்திரை குத்தி அனுப்புகின்றோம்: சிறிதுகாலத்திற்குள் அடையாளம் தெரியாமற் தேய்ந்து தேய்ந்து போய்விட்டுக் கடைசியில் ஒருநாள் நாணயச் சாலைக்கே (mint) திரும்பி வந்து சேர்கின்றது. இந்தப் பிரகிருதி (Nature), பொதுஜனப் பிரதானமன்று (Democracy). சட்டசபைகளுக்கு அடங்கிய ஆட்சியுமன்று (Limited-Monarchy). அது சுயேச்சாதிகாரமே (Despotic) செலுத்தும். வாய்த்துடுக்கு மிகப்பெற்ற மக்களாலும் தன் அதிகாரத்தில் ஒரு துளிகூட வஞ்சித்துக் குறைக்க இடம் தராது. மாந்தரது மனம் அகன்று பகுத்தறிவு புகப்புக முன்னிருந்த சட்டநிர்மாணங்கள் பிதற்றிப்

பிதற்றிப் பேசுகின்ற மிருகங்களாகத் தோன்றிக் கொண்டேவரும். ஆதலால், சட்டம் சொல்வது இன்னதென்று தெரியவில்லையே, அதைத் தெளிவாகப் பேசும்படி செய்துவைக்க வேண்டுமென்று அடிக்கடி முயன்று பார்ப்பர். இதற்கிடையில்,பொதுஜன மனமானது தேர்ச்சியடைந்து கொண்டே வளர்கின்றது. பொய்யிலா மெய்யர்தம் மனோரதங்கள், பின்னாள் நிறைவேறும் தீர்க்கதரிசனங்களும் ஆகிவிடுகின்றன. கலைவளரும் உள்ளத்து இளையவர், "இன்னபடி உலகம் இருந்தால் ஆகாதோ !" என்று என்று இன்றைக்குக் காண்கின்ற கனவுகளும், வேண்டுகின்ற பிரார்த்தனையும், தீட்டுகின்ற சித்திரமும் ஒருநாளும் வீணாகப் போவதில்லை. வெளியிற் சொன்னால் 'இவைகாரிய சாத்தியமல்ல' வென்று பிறர் சிரிப்பரே என்னும் நாணத்தால் அவர் வாய்திறக்க மாட்டாரேனும், அந்தக் கனவும் பிரார்த்தனையும் படங்களுமே நாளைக்குப் பொதுஜன சங்கங்களின் தீர்மானங்களாகத் தோன்றிப் பிறகு எங்கள் குறை இதுவென்று எல்லாரும் போராடக் கடைசியில் சட்டம் எனும் வெற்றிகொண்டு, வேறுவேறு கனவிற்கும் படத்திற்கும் இடம்கொடுக்கும் வரையில், நிலைபெற்று ஒருநூறு ஆண்டளவு நிற்கின்றதாகின்றன. தேசத்தின் சரித்திரமானது, ஆதலால், மாந்தர்தம் மனத்தேர்ச்சியின் நுண்மையையும்அதனாலெழும் பிரார்த்தனையையும் சிறிதுதூரம் பின்னாகவே தொடர்ந்து வருமே யல்லாது முற்படாது.

[அரசியல் முறைகளையும் ஆசாரவிவகாரச் சட்டங்களையும் சீர்திருத்த முயல்வதால் ஜனங்களுக்கு யாதும் பயன்படாதென்பது எமர்ஸனின் கொள்கை. அது குதிரைக்கு முன்னே வண்டியைக் கட்டி ஓட்டுவதற்கு நிகராகும். இன்னபடி குடிவாழ்க்கை இருக்கவேண்டு மென்னும் அவா முதலில் ஜனங்களது மனதில் பிறந்து வளரவேண்டும். இந்த அவா உயர்ந்ததா யிருப்பதற்கு அவர் மனத்தேர்ச்சியும் மனோபாவமும் அடைந்துள்ள உயர்ச்சியே அளவாகும். ஜனங்களுக்கு நல்லுணர்ச்சி வளர்ந்துகொண்டு வரவரச் சட்டங்களும் தாமே திருந்திக்கொண்டு வருமேயல்லாது,சட்டத்திருத்தமென்றும் அரசியல் முறையென்றும் நாம் வலிந்து மாற்றி வைப்பதால் ஜனங்களுக்கு நலமொன்றும் பயப்பதில்லை. நல்லுணர்ச்சி விளைவதற்குக் கலைகளோடு பயில்வதே மார்க்கமென எமர்ஸன் குறிப்பதையும் மறத்தலாகாது.]

மனிதர்களுடைய மனதில் இராஜ்ய தந்திரத்தைப் பற்றிக் குடிகொண்டிருக்கின்ற கொள்கைகள்தாம் சட்டங்களாயும் அரசாங்கத்திற்கு எதிராகச் செய்கின்ற போராட்டங்களாயும் வெளியே தோன்றுகின்றன. இக்கொள்கை யாதெனில், சரீரம் சொத்து ஆகிய இவ்விரண்டு விஷயங்களைக் காப்பதற்காகவேதான் அரசாட்சி அமைந்திருக்கின்றது என்பதாகும். சரீரம் வரையில் எல்லாரும் ஒரேமாதிரியா யிருப்பதால் மாந்தரனைவரும் சமஉரிமை உடையவர்கள். ஆதலால், சரீர உரிமையை நினைத்தபோது யாவரும் பொதுஜன சமஆட்சி(democracy) வேண்டுவர். ஆனால் சொத்து சம்பந்தமாக மனிதர்களுக்குள்ள உரிமையோ ஏற்றம் தாழ்வு உடையது. ஒருவனுக்கு இடுப்பில் கட்டிய துணிதவிர வேறு ஆஸ்தி இருக்காது ; இன்னொருவனுக்கோ ஜில்லா முழுவதும் சொந்தமாக இருக்கலாம். இந்த வித்தியாசம் அவனவனுக்கு அமைந்த சம்பாத்திய சாமர்த்தியத்தையும், சில சமயங்களில் பிதுரார்ஜிதத்தின் அளவையும் பொருந்தியதாய் இருக்கின்றது. எந்தக் காரணத்தால் இந்த ஏற்றம் தாழ்வு ஏற்பட்டபோதிலும், சொத்தின் அளவிற்குத் தகுந்தபடி சிலர்க்கு நாட்டில் உரிமை அதிகமாகவும் சிலருக்குக் குறைவாகவும் இருக்க நேர்கின்றது. ஆளுரிமை அனைவர்க்கும் சமம்; ஆதலால் இதை மாத்திரம் கருதினால் அரசாங்கம் அமையவேண்டியது ஜனத்தொகையைப் பொருந்தியதா யிருக்கும். ஆஸ்தியைக் கருதி அரசியல் அமைய வேண்டுமானால் அது முதலாளிகளையும் அவர்களது ஆஸ்தியையும் பொருந்தியிருக்க வேண்டுமென்பது அவசியம். முதலாளியாக இருக்கின்ற ஒருவன் தன் சொத்தைப் பிறர் அபகரித்துக்கொண்டு போகாமல் காப்பதற்குத் தகுந்த உத்தியோகஸ்தர்களை நியமனம் செய்வதற்காக வரி செலுத்தி வருகின்றான். பொருள் இல்லாதவனுக்கு அது போய் விடுமோ என்னும் பயமும் இல்லையாகையால் அவன் வரி யொன்றும் செலுத்துவதில்லை. ஆனால் பொருள் இருக்கின்றவனாகட்டும் இல்லாதவனாகட்டும் இரண்டு பேருக்கும் சரீரம் உண்டு. அந்தச் சரீரத்திற்குக் கஷ்டங்கள் வாராமல் காப்பதற்குத் தகுந்த உத்தியோக ஏற்பாடுகள் செய்ய இவ்விருவருக்கும் இருக்கின்ற உரிமை சமம். ஆனால் ஆஸ்தியைப் பாதுகாக்கும் உத்தியோகஸ்தரைத் தேர்ந்தெடுக்க வேண்டியவன் நியாயமாய் முதலாளியாகத்தானே இருக்க வேண்டும். ஆதலால் பொருளைக் காப்பதற்குக் காவலுத்தியோகஸ்தர்களை அதிகமாய் ஏற்படுத்த வேண்டுமென்றால், தம் பொருளின் ஒரு பாகத்தை வரியாகச் செலுத்தி மற்றப் பாகத்தின் காவலை விரும்புகின்ற தனவந்தர்களே அதைத் தீர்மானம் செய்யத் தகுந்தவர்கள். இருக்கக் கூரையு மில்லாது ஊரூராய்த் திரிந்து இட்டசோற்றைத் தின்று வளர்பவர் பொருள் சம்பந்தமான சட்டதிட்டங்கள் செய்வதற்கு அவ்வளவு தகுந்தவ ரல்லர்.

ஆதிகாலத்தில் பணக்காரர்களெல்லாம் தங்கள் செல்வத்தைத் தாங்களே மெய்வருந்திச் சம்பாதித்துக்கொண்டவர்களாயிருந்தார்கள். இந்தவிதம் அவரவர் ஆஸ்தி அவரவர்க்கு நேராக வருவதாயிருந்தால், பொருள் சம்பந்தமாகப் பொருள் உடையவர்களும் சரீர சம்பந்தமாக மனிதராயிருக்கின்ற யாவரும், தத்தமக்குத் தக்கபடி சட்டநிர்மாணங்கள் செய்துகொள்ள வேண்டுமென்பது அல்லாது வேறு எவ்வித அபிப்பிராயமும் பொதுஜன வாழ்க்கையில் ஏற்படுவதற்கு நியாயமில்லை.

எனினும்; இந்தவிதமாகச் சரீரஉரிமையென்றும் சொத்து உரிமையென்றும் வேறுவேறாய் எல்லா விஷயங்களிலும் பிரித்து விவகரிக்க முடிகின்றதில்லை; அவையிரண்டும் ஒன்றோடொன்று கலந்து விடுகின்றன. ஆதலால், சொத்துக்குச் சொத்துடையவர்களும், சரீரம் வரையில் யாவரும் நிர்வாகம் செய்துகொள்வதே தகுதி என்னும் அக் கொள்கை எல்லோராலும் எளிதில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாயிருந்தாலும், அதன் படி அனுசரித்து வருவது கஷ்டமாயிற்று. கடைசியில், சரீரப் பாதுகாப்பு வரையிலும் நிர்வாக உரிமை யாவருக்கும் சமமாயிருந்த போதிலும் செல்வம் உடையவர்களுக்கே இந்த விஷயத்திலும்கூடச் செல்வாக்கு அதிகமாகிச் சட்ட நிர்வாக சபைகளில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கும் உரிமை மிகுந்ததாய்க் காணப்பட்டது. சமத்வமாயிருப்பதுவே நியாயம் என்ற தன்மை அகன்று நியாயமாயிருப்ப தெல்லாம் சமந்தான் என்று ஆயிற்று.

எது முறையோ அதுவே சமம், என்னும் இந்தக் கொள்கை முற்காலத்தில் சந்தேகத்திற்கு ஆஸ்பதமாயிருந்ததில்லை. ஆனால் இக்காலத்தில் இது நீதியோ எனும் சங்கை பிறக்கத் தலைப்படுகின்றது. இந்தச்சங்கை ஏற்படுவதற்குக் காரணம் இரண்டு இருக்கின்றன. பொருள் ஆதாயச் சம்பந்தமாகச் செய்திருக்கின்ற சட்டங்களுக்கு அளவு கடந்த முக்கியஸ்தானம் கொடுத்துப்



பழக்க வழக்கங்களால் கட்டி வைத்திருப்பதால், ஏழைகளின் உரிமைகளைக் கவர்ந்து அவர்களை ஏழைகளாகவே தனவந்தர் அடக்கி வைக்க நேர்கின்றதோ எனும் அபிப்பிராயம் சிலர் மனதில் தோன்றி இருப்பது ஒன்று. மற்றது இதினிலும் முக்கியமானது. அது யாதெனில், ஆஸ்தியைப் பிரதானமாக நினைத்துச் செய்கின்ற நிர்மாணங்க ளெல்லாம் மனித வாழ்க்கையைப் பாழாக்கித் தாழ்மைப்படுத்தும் தன்மையனவென்றும்; வாஸ்தவத்தில் அரசாங்கத்தார் கண்ணுங் கருத்துமாய் இருக்கவேண்டியது மாந்தர்களைப்பற்றியே இருக்கவேண்டியது ஒன்றுதான் என்றும் ; மனிதர் முன்னேற்றம் அடைந்தால், பொருளும் தானாகவே முன்னேற்றம் அடையும் என்றும்; மனிதர்களுடைய மனதைப் பண்படுத்தி வளர்ப்பதே அரசாட்சியின் பிரதான நோக்கமாயிருக்கவேண்டு மென்றும்; மக்களுக்கெல்லாம் கல்விப் பயிற்சி ஏற்படுமாயின் மற்றச் சட்ட விதிகளும் தானாய முறைகளும் செம்மையடையும் என்றும் ; அப்பொழுதே தருமசிந்தனையே தேசச் சட்டங்களை எழுதிவைப்பன ஆகும் என்றும், சரிவரச் சொல்வதற் கரியதேனும் சுயமாயுணரவல்ல வோர் உள்ளுணர்ச்சி பற்பலர் எண்ணத்தில் எழுந்து ஆங்காங்குத் தோன்றுகின்ற தோற்றமேயாகும். (தொடரும்.)

## வர்த்தமானம்.

**கம்பர் கவித்திறம்** :—1928 ௵ ஜனவரி ௴ 16-௳ திங்கள் மாலை 5-15-மணிக்குச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியின் மாணவர் தமிழ்க் கல்விக் கழகச் சார்பில், திருவாளர் க. இராமசந்திர ஐயர் அவர்கள் B.A., அவைத்தலைமையின்கீழ்த் திருக்குறள் விளக்க ஆசிரியர் குப்புசாமி முதலியாரவர்கள் கம்பர் கவித்திறம் என்னும் விடயத்தைக் குறித்து ஒரு சொற்பெருக்கு நிகழ்த்தினர். அவ்வமையம் அவைத்தலைவர் முன்னுரையாகக் கூறியதாவது :—

அன்பர்களே, யான் ஒருமுறை ஓர் அறிஞருடன் கம்பரைப்பற்றிப் பேசிக்கொண் டிருக்கையில், அவர் கம்பராமாயணத்தில் தெய்வத் தமிழ்மறையாக நாம் போற்றி வரும் திருக்குறளிலுள்ள குறட்பாக்கள் 1330-ம் பயின்று வந்துள்ளன வென்றனர். பின்னொருபோது மற்றோரறிஞர் இராமாயணத்தில் குறட்பாக்களனைத்தும் பயின்று வரவில்லை யெனக் கொள்ளினும், திருக்குறளினின்றும் அதிகாரத்திற் கொன்றாகத் தேர்ந்தெடுத்த 133 குறட்பாக்களையேனும் கம்பர் தமது நூலில் ஆங்காங்குப் பொருத்தமான இடங்களில் எடுத்தாண்டிருக்கின்றன ரென்பது மிகையாகா தெனக் கூறினர். இராமாயணத்தையுந் திருக்குறளையும் ஆழ்ந்து கற்போர்க்கு இஃதுண்மை யென்பது புலப்படும்.

கம்பர் வரத்தாற் கவி பாடினாரென்பது கர்ணபரம்பரை. ஆயினும், நாம் இராமாயணத்தை நன்காராயுங்கால், அவர் திருத்தக்க தேவரியற்றிய சீவக சிந்தாமணி, திருவள்ளுவ ரியற்றிய திருக்குறள் முதலிய அரும்பெறன் மணிகளாம் நன்னூற்களினின்றுங் கருத்துக்களையும் சிலபல அடிகளையும் சொற்றொடர்களையும் தேர்ந்தெடுத்துத் தம் காவியத்தில் அவற்றைஇடம்நோக்கிப் பொன்மலர் நாற்றமுடைத்தானாற் போலப் பின்னுஞ் சிறப்புத் தோன்ற அமைத்துச் சொல்லுந் திறன் நன்கு விளங்குவதால், கம்பநாடர் இளமையில் இலக்கிய இலக்கணங்களை யினிது கற்றுத்தேர்ந்து, மக்கள் இயற்கையையும், உலகியலையும், இன்னோரன்ன பிறவற்றையு நன்கறிந் திருந்தன ரென்பது உள்ளங்கை நெல்லியங் கனியெனத் தெள்ளிதிற் புலனாம். இது நிற்க.

தமிழராகிய நாம் இப்பொழுது இறந்துபடா திருக்கும் அரும்பெருந் தமிழ் நூற்களை ஊக்கத்தோடு கற்பதே போதுமானது. அதுவே நாம் தமிழ்க் காற்றும் நற்றொண்டாகும். யான் கும்பகோணம் கல்லூரியில் பி.ஏ., வகுப்பில் கற்றபோது, அக்காலத் தமிழில் அவ்வகுப்புக்குப் பாடமாக வேற்பட்ட பகுதியில் கம்பராமாயணத்தினின்று மெடுத்த சில செய்யுட்களு மடங்கியிருந்தன. அதுபோது அக்கல்லூரியில் தமிழாசிரியராக விருந்த மகாமகோபாத்தியாயர். ஸ்ரீ. உ. வெ. சாமிநாதையரவர்கள் அச்செய்யுட்களின் அருமை பெருமை விளங்குமாறு போதித்தமையேயெனக்குக் கம்பராமாயண முற்றுங் கற்கத் தூண்டுகோலாயிற்று. ஆங்கிலக் கல்விமுறை நாம் பண்டைக்காலந் தொட்டுக் கையாண்டு வந்த பாடம் போற்று முறையை யடியோடொழித்துவிட்டது வருந்தத்தக்கதே. தமிழ்ப் பயிற்சியாலுண்டாகும் இன்பம் புத்திநுட்பம் தெளிவு முதலியவற்றைப் பெற விரும்புவோர்க்குக் கம்பராமாயணமொன்றே போதுமானது. இக்காவியம் முழுதும் திராட்சாபாகமாக அமைந்துளது. பின்பு, திருவாளர் குப்புசாமி முதலியார் பேசிய தன் சுருக்கமாவது :

'கல்வியிற் பெரியன் கம்பன்,' 'விருத்தமென்னும் ஒண்பாவிற் குயர் கம்பன்,' என்னும் வழக்கே கம்பர் கவித்திறத்தை விளக்கப் போதியனவாம். யான் இப்பொழுது பேசநினைந்தது இந்நூலிலுள்ள அருமை பெருமைகளுள் சிலவற்றைப் பற்றியதே யாகும். நூலினகத்துப் பரந்து கிடக்கும் விடயங்களை யாராய்வது எனக்கு வழக்கமே தவிர, 'நூலின் ஆசிரியர் என்று பிறந்தார்?' எங்குப் பிறந்தார்? எங்கு வளர்ந்தார்?' என்னும் இன்னோ ரன்ன புறவாராய்ச்சிகளில் என் மனம் செல்லுவதில்லை. அவற்றை யாராய்வதால் ஏற்படும் பயன் பெரிதென்றெனக்குத் தோன்றவில்லை.

கம்பர் திருக்குறளிடத்து மிக்க மதிப்புடையாரென்பது அவர் நூன்முதலிற் கூறும் ஏற்புடைக் கடவுள் வாழ்த்தாகிய,

'நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வோர்க்கே.'

என்னுஞ் செய்யுளின் கண்ணே சொற்களை முறைப்படியமைத்திருப்பதே விளக்கும். 'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும், பொருளல்ல தில்லை பொருள்' என்பது குறள் ஆகலான், மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளை முன்னமைத்தார். பொருள் கல்விப்பொருள் செல்வப்பொருள் என இருதிறப் படுமன்றே? கல்வியாலடைவது ஞானமும் பொருளாலடைவது புகழுமாதலின் அவற்றை அம்முறையே பின்னமைத்தார். ஞானமும் புகழுமடைதல் வீட்டின்பங் கருதியாகலான் வீட்டினை யவற்றின் பின்வைத்தார். 'அற்றது பற்றெனின் உற்றது வீடு' என்பது நோக்கத்தக்கது. இனி யிவை யாவர்க்கு வாய்க்கப் பெறுமெனின், 'வாகை சூடிய சிலையிராமன் தோள் வலி கூறுவோர்க்கே' என்றார். 'உலகம் யாவையும்' எனத் தொடங்கும் கவி வழிபடு கடவுள் வணக்கமாம். திருவள்ளுவர் 'அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே யுலகு' என்றது கருதத் தக்கது.

திருக்குறளினமைந்து கிடக்கும் வான்சிறப்பு முதலியன கம்பரில் ஆற்றுப்படலத்தில் முறைபட அமைந்து கிடத்தல் காணலாம். 'வண்மையில்லையோர் வறுமையின்மையா' லென்னுங்கவியால் கம்பர் நாட்டுவளத்தை நன்கெடுத் தியம்பினர். அரசனைப்பற்றிப் பேசுங்கால் கம்பர் 'தாயொக்கும் அன்பில்' என்னுங் கவியமைத்தது போற்றற் குரியது.

தயாதன் வேள்வியாற்றக் கருதிக் கலைக்கோட்டு முனிவரை யழைக்க விரும்பியபோது, கதிரிள மடந்தையர் சிலர், முற்றத்துறந்த அத்தவசியைத் தாம் சென்று அழைத்து வருவதாகக் கூறி மன்னனிடம் விடைபெற்றுச் சென்றனர். இத்தருணத்திற் கம்பர் அம்மடந்தையரின் உருவத்தை வருணிக்கும் குறிப்பொன்றே அப்பெண்டிர் அத்தொழிலாற்ற வல்லுநரென்பதை விளக்கும். தயாதன் இராமனைப் பிரிய வேண்டுமே என எண்ணி வருந்துங்கால் கம்பர் 'பிறவிக் குருடன் கண்பெற் றிழந்தான்' என்னுமுவமை யமைத்திருப்பது மிகவும் வியக்கத் தக்கது.

தாடகை வதைப் படலத்தில், இராமபிரானுக்கு வனத்தைப் பற்றிக் கூறவந்த விசுவாமித்திரர் 'பற்றவா வேரொடும் பறித்து' என முனிவர் உயர்வைக் கூறி அவ்விடத்தைச் சிறப்பித்தல் பாராட்டற் பாலது. வேள்விப் படலத்துச் சோலையை வருணித்த கம்பர், அது தங்கள் நாயகரின் வேறு தவம் தெய்வம் இல்லை யென்றெண்ணும் மங்கைமார் சிந்தைபோலத் தூயது, என்று கூறுவது கம்பரது மனோ தத்துவத்தை இனிது விளக்

கும். இராமபிரானும் இலக்குமணனும் வேள்விச் சாலையைக் கண்ணை யிமை காப்பதேபோல் காத்தனர் என்றது கம்பசூத்திரம் என்பர். 'வெள்ளியை யாதல் விளம்பினை' என்னுங் கவியில் சொல்லாற்றலும் பொருளாற்றலும், 'நல்லா றெனினுங் கொளல் தீது மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' என்னுங் குறளின் முழுக் கருத்தும் அமைந்திருப்பது நோக்கத் தக்கது. பூக்கொய் படலத்தில், மலர் பறிக்க மரமிசை யேறினானொருவன் மனமிசை யேறினா ளொருத்தி யெனக் கம்பர் நயம்படக் கூறிக் காதல் வன்மையை நனிவிளக்கினர். குகப்படலத்துள் 'எய்யலாமிப்படை' எனுங் கவியில் 'ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை நாக முயிர்ப்பக் கெடும்' என்னுங் குறளின் கருத்தமைந்துள்ளது. இன்னும் எத்தனையோ விடயங்கள் நாம் கற்றறிந்து மகிழக் கம்பரிடங் கிடக்கின்றன. அவைத் தலைவர் கூறியபடி பண்டை நூற்களைப் போற்றிக் கற்பதே நம் கடமையெனக்கொள்ளவேண்டும். பின்னர் அவைத்தலைவர் கூறிய பின்னுரையின் சுருக்கமாவது: —

கம்பர் சொன்னயம் பொருணயம் சுருங்கச் சொல்லல் முதலிய அழகுகள் பொருந்தக் கவியாக்கும் திறம் பெற்றவர் என்பதை இராமாயணத்திலுள்ள ஒவ்வொரு கவியும் விளக்கும். சிந்தாமணி கந்தபுராணம் முதலிய நூற்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கம்பர் செய்யுட்கள் இனியனவாய்க் காணப்படுகின்றன. பயனற்ற அடைமொழிகளும் மோனை யெதுகைகளுக்காகச் சொற்களும் அமைக்கும் வழக்கம் கம்பரிடத்திலில்லை. கம்பராமாயண கவிகளில் திரிசொற்கள் அருகி யிருத்தலின், அகராதியின் உதவி சிறிதே வேண்டுவதாம். 'ஓசை பெற்றுயர் பாற்கடல்' என்னுங்கவி இதற்குச் சான்று பகரும். இச்செய்யுளில் 'காசில்' என்னுந் தொடர் கொற்றம், இராமன், கதை என்னும் மூன்று சொற்களையும் தனித்தனி விசேடித்து நிற்றலின் இவ்வடை மொழியின்றி யமையாது வேண்டப்படுவது புலனாகின்றது.

கம்பர் உவமை யணியே பெரிதும் ஆளுவர். அவர் 'ஓசைபெற்றுயர்' என்னுங் கவியில் பூசையைத் தமக்கு உவமை யாக்கியது நோக்கத் தக்கது. தாம்வால்மீகி ராமாயணத்தைத் தமிழிற் செய்து அவ்வான்மீகியையும் வென்று அவருக்கு ஒருவாறு இழிவையும் உண்டாக்கினமை தோன்ற நன்றியில்லாப் பூனையைத் தமக்கு உவமையாக்கிக் கொண்டது பொருந்தும்.

காளிதாசர், ஷேக்ஸ்பியர் முதலிய கவிகளிடம் காணும் சம்பாஷணைத் திறம் கம்பரிடத்தில் மிகுதியுங் காணலாம். இதனைக் குகப் படத்தில் குகனுக்கும் பரதனுக்கும் இடையே நடைபெறுஞ் சம்பாஷணை இனிது விளக்கும். கம்பராமாயணத்தில் சென்றுதேய்ந் திறுதல் என்னுங் குற்றம் சிறிதுமில்லை. இறுதிக் காண்டத்திலுள்ள மீட்சிப்படலத்தை நோக்குங்கால் மற்றக் காண்டங்களிலுள்ள அழகினும் அக்காண்டத்திலுள்ள படலங்களினழகு விஞ்சித் தோன்றுகின்றது.

இத்தகைய நூலின் அழகை ஒரு பிரசங்கத்தில் முற்று முணர வியலாதாகலின், நாம் பன்முறையும் கேட்டுக் கேட்டானந்திக்க முயலவேண்டும். திருவாளர் குப்புசாமி முதலியாரவர்கள் இராமாயணத்து முதல் மூன்று காண்டங்களிலிருந்து சிற்சில செய்யுட்களை யெடுத்து, அவற்றின் இனிமை நன்குதோன்றப் பிரசங்கித்தமை போற்றற்பாலது.

அவைத்தலைவர் இங்ஙனங் கூறிமுடித்ததும் கழகக் காரியதரிசிகள் தலைவருக்கும் உபந்நியாசகருக்கும் மலர்மாலை சூட்டியபின் ஷை கல்லூரித் தமிழாசிரியர், திருவாளர். M. கந்தசாமி முதலியாரவர்கள் B. A., இருவர்க்கும் கழகச்சார்பில் வந்தனோபசாரங்க ளியம்பினர்.

***

**தனி அரசுத் தீர்மானம்** :—சுயஆட்சி உரிமை பெறுவதே தம் நோக்கம் என்று மன்றாடுவது விட்டு, இனி இந்தியா, ஆங்கில ஏகாதிபத்யத்துடன் ஒருவித சம்பந்தமும் இல்லாமல் அறவே பிரிந்து தனியரசு செய்ய வேண்டும் என்பதே நமது கருத்தா யிருக்கவேண்டும் என்று சென்ற காங்கிரஸில் தீர்மானம் செய்தனர். இந்தத் தீர்மானத்தைப் பற்றிப் பொதுஜனங்களுக்கு இடையிலுந்தலைவர்களுக்குள்ளும் அபிப்பிராயம் பலவிதமாய்ப் பேதப்படுகின்றது. வரப்போகின்ற ஸைமன் கமிஷனில் இந்தியரெவரையும் சேர்க்காத பெருங்குறையே இவ்விதத் தீர்மானம் செய்யத் தூண்டியதென்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனால், பிரிட்டிஷ் பார்லிமெண்டார் நமது அபிப்பிராயத்தை யெல்லாம் சிறிதும் மதிக்காமல் செய்த அந்தச் செய்கைக்குப் பதிலாக இந்தப் பேச்சுக்கள் பேசித் தீர்மானத்தை எழுதிவைப்பதால் என்னபயன் என்று மகாத்மாகாந்தி கேட்கின்றார். அவர்கள் துணிந்து செய்த அந்தச் செய்கைக்கு எதிராக நாமும் ஏதேனும் திடமாகச் செய்யக் கூடுமாயின் செய்ய வேண்டியவரே யல்லாது காங்கிரஸ் தீர்மானத்தால் ஆவது ஒன்றுமில்லை என்பது அவர் கருத்து. இவ்விதம் அவர் எடுத்துக் கேட்பது தலைவர்கள் சிலருக்குச் சம்மதம் இல்லை. இவர்களில் சிலர், இதுவரையில் நமது நாட்டமாக இருந்த சுயஆட்சி உரிமைக்கும், இப்பொழுது நிறைவேறிய தனியரசுத் தீர்மானத் திற்கும், பார்க்கப்போனால், காரிய அளவில் பேதம் அதிகமில்லையென்றும் அந்தநாட்டத்தையே இப்பொழுது இந்தவார்த்தைகளால் வெளியிட்டிருப்பதாகவும் கூறுகின்றனர்.

பொதுஜனங்களுள் பலருக்கு ஆங்கிலேயரின் படைக்காவல் நமக்கு இல்லாமற்போனால் இந்தியாவின் கதி என்னவாவது ; நாமின்னும் தனியரசிற்கு ஆயத்தமாகவில்லையே என்னும் சந்தேகம் இருப்பதால் இந்தத் தீர்மானம் யோசனைக் குறைவால் நேர்ந்ததென அவர் எண்ணுகின்றனர். இப்படிப்பட்டவர்களுக்குச் சமாதானமாய்த் "தீர்மானம் இது நிறைவேறியதென்றால், நாளைக்கே நாம் தனியரசு பெற்று விடுவோமோ ; நம் ஆசையும் இலக்ஷியமும் அதுவென்று இத்தீர்மானத்தால் காட்டுகின்றோமே யல்லாது, அதை உடனே அடைந்து விட வேண்டுமென்று கூறவில்லை" என்னும் உத்தரம் உரைப்பாரும் உளர்.

நெடுநாளாய்ப் பாடுபட்டுத் தேடிய இவ்விந்தியதனத்தை நமக்கு விட்டு விட்டு ஆங்கிலேயர் எளிதில் அகல்வரோ ? மற்று, அவர்களை அகற்றிவிடும் வன்மை நம்மிடத்தில் இல்லாதபோது வீண்வார்த்தை வளர்த்து அவர் வெறுக்க நடந்துகொள்வதால் ஏது பயன் ! என்றும் சிலர் நினைப்பர்.

இந்தத் தீர்மானம் காங்கிரஸில் செய்தது சரியா அல்லவா என்றவரையில் அப்பிப்பிராய வேறுபாடு இருக்கின்றதெனினும், இவைகளுக்குள் ஒன்று ஒற்றுமை காணலாம். தனியரசு பெறக்கூடுமாயின் அது பெறுவதே சிறந்ததென்று யாவரும் ஒரு மனதாய்ச் சம்மதிக்கின்றனர். இந்த நோக்கத்தை வாயிற் சொல்வதொடு பயனில்லை என்றும், அதைக் காரியத்தால் சாதிக்க முடியாத வரையில் சும்மா இருப்பதே யுக்தமென்றும், கால அளவில் நாம் தகுதியுற்றபின் அந்தத் தனிநிலை அடைவதல்லாது இன்றைக்கே அதை அடைந்துவிட நினைக்கப்படாதென்றும் கூறித் தலைவர் தம்முள் மாறுபாடுகின்றனர். ஆங்கிலப் பார்லிமெண்டிற்கும் நமக்கும் தொடர்ச்சி அற்றுவிடுமாயின் அதனால் நன்மைபல இழந்துவிட நேரிடும் என்று நினைப்பவர் நாம் கண்டவரையில் வெகு சிலரே இருப்பர்.

—✿✿—


## லோகோபகாரி.

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தா தாராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்கை யெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாய், வெளி வருகிறது முப்பத்தி நான்காவது ஆண்டு நடக்கிறது. பத்திராதிபர் : பரலி - சு. நெல்லயப்ப பிள்ளை. வருஷ சந்தா ரூபாய் 4.

லோகோபகாரி பத்திரிகாலயம்
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.
மாதிரிப்பிரதி இனாம். (7)


188986




# யுனைடட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ்
## கம்பனி, லிமிடெட்.

(2)

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்
பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம்.
சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமாயிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனால் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யுரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயுப் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறுமாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றார்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யுரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281,
10, மக்லீன் தெரு, சென்னை.

ஸ்டார் அண்டு கம்பனி
மானேஜர்கள்.



# Dr. Orison Swett Marden's
# World Famous Inspirational Books

(3)

## TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

### GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

### RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

### SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

### HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty

### PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

### EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

### THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

### THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

**Special Indian Edition Rupee 1-8-0 each**

V. KALYANARAM IYER & Co.,
BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

(1) **இண்டஸ்டிரியல் & புருடன்ஷியல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.**

ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய். [1913

**நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்**

இந்திய லைப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்) Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.

Sir. ஹுகும் சந்து ஸரூப் சந்து K T. வேல்ஜி லக்ஷிமி B. A. L. L. B.

மோடிலால் C ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய். லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோவிஷா எம். மேத்தா M. A. L L. D. K C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ 2,21592.

வசூலிக்கப்படாத மூலதனம் ரூ. 16,25000.

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாக்வுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதவும்:—

**நாராயிண் தாஸ் கிர்தர் தாஸ்,**

உள்ளூர் மானேஜர்,

நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.

(4)

# நாஷ்

# NASH

**மோடார்கார் உலகத்தில் இதுவே முதல்**



நாஷ் எல்லாவிதத்திலும் விலைக்குமேல் பயன் கொடுக்கும்.

சோல் ஏஜண்டுகள்

நாஷ் வெகுதூரம், வெகுகாலம் வேகமாய் ஓடுவதில் இதுவொன்றே - - - - - முந்துகிறது.

**மோடார் ரிகண்டிஷனிங் ஸ்டேஷன்,**

161, மவுண்ட் ரோட், சென்னை.

தந்தி அட்ரஸ்:—ஆல்மோடார். (Allmotor) போன் நம்பர் 3708.

*N. B.—Wanted distributors in every district.*

Printed at the B. N. Press, Mount Road and Edited and Published by Mr. E. Kumariah, B.A., B.L.